# மன்னா

## கிறிஸ்மஸ் – புதுவருட சிறப்பிதழ்



### உங்கள் அனைவருக்கும் என் இனிய கிறிஸ்மஸ், புதுவருட நல்வாழ்த்துக்களையும், இறை ஆசீரையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“கிறிஸ்மஸ் மகிழ்வின் காலம். இம்மகிழ்வின் காலத்தில் குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில் இயேசுவின் பிறப்பால் நாம் பெறும் மகிழ்ச்சியை எம் அயலவர்களோடு பகிர்ந்து கொள்வதே காலத்தின் தேவையாகும். “விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவரும்”. (லூக். 1:79) இந்நாட்களில் நாம் நம்பிக்கையில் தளர்வுறாது தொடர்ந்து செயலாற்றுவோம். “ஆண்டவரின் காலத்தில் நீதி தழைத்தோங்கும்” (தி.பா.72:7) என்ற திருப்பாடல் ஆசிரியரின் நம்பிக்கையை நமதாக்குவோம். கிறிஸ்துவின் அமைதி உங்கள் உள்ளங்களில் குடிகொள்வதாக.”
உங்கள் ஆயர் - பேரருட்திரு. கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ. ●



## “நாம் கிறிஸ்துவுக்குள் அனைத்திலும் புதுப்பித்தலடைய வேண்டும்”

### மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டில் ஆயர்







கடந்த நவம்பர் மாதம் 20, 21, 22 ஆகிய தினங்களில் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு இறையியல் கற்கை நிலைய இயக்குனர் அருட்பணி. ப. டெஸ்மன் குலாஸ் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம் மாநாட்டின் இறுதி நாளன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிமேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் அங்கு பிரசன்னமாகியிருந்த துறவறத்தார், விசேட பிரதிநிதிகள் மற்றும் பங்குப் பிரதிநிதிகள் ஆகியோருடன் சேர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கின்ற பொழுது “கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்தில் அனைவரும் எம் வாழ்வின் அனைத்து நிலையிலும் புதுப்பித்தல் அடைய வேண்டும்.” என கூறினார். மேலும் அவர், எம் மறைமாவட்டத்தின் பங்கு மக்கள் அனைவரின் சிந்தனை, சொல், செயல், மனப்பாங்கு, சாதி, வழிபாட்டு முறை, பாரம்பரியங்கள் அனைத்தும் இப் புதுப்பித்தலுக்குள்ளாக்கப்பட வேண்டும். தனி மனிதன், இளைஞர், குடும்பம், அன்பியம் ஆகிய நிலைகளில், வருகின்ற புதுப்பித்தல் ஆண்டில் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் தனிமனித புதுப்பித்தல், அருட்பணி. செபமாலை அன்புராசா (அமதி) இளையோர் புதுப்பித்தல், அருட்பணி. பிலிப் (IVD) குடும்பப் புதுப்பித்தல் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அன்பியப் புதுப்பித்தலைப் பற்றியும் கருத்துரைகளை வழங்கினார்கள். ●





## முதன்முறை இலங்கையில் நடைபெற்ற கத்தோலிக்க விருது வழங்கும் வைபவம்



இலங்கைக் கத்தோலிக்க திருஅவையின் மறைமாவட்டங்களில், கத்தோலிக்க விசுவாசத்தைப் பல்துறைகளில் வெளிப்படுத்தி வருகின்ற கலைஞர்களை இனங்கண்டு, அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு இந்த மாதம் 06ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை திருஅவையின் சமூகத்தொடர்பாடல் ஆணைக்குழுவின் தேசிய இயக்குனர் அருட்பணி. லால் புஸ்பதேவ பெர்னாண்டோ அடிகளார். மறைமாவட்டங்களின் சமூகத்தொடர்பாடல் இயக்குனர்களின் ஒத்துழைப்போடு இவ்விருது வழங்கும் நிகழ்வை சிறப்பாக நடாத்தியிருந்தார். இலங்கை கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு இந்நிகழ்விற்கு அனுசரணை வழங்கியது.

மன்னார் மறைமாவட்டத்திலிருந்து வங்காலைப் பங்கைச் சேர்ந்த திரு. யோசேப் ஆரோக்கியம் குரூஸ் - நாடகத்துறையிலும், பொன்தீவுகண்டலைச் சேர்ந்த திரு. செபமாலை செபஸ்ரியாம்பிள்ளை தேவநாதன் - இசைத்துறையிலும் தங்கப்பதக்க விருதுகளை இந்நிகழ்வில் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ●

## நாட்டில் அமைதியான அரசியல் நிலவ செபியுங்கள்

### – ஆயர் பேரவை –

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் எம் கத்தோலிக்க விசுவாச இறைமக்களுக்கு, எம் நாட்டின் நிகழ்கால சூழ்நிலை குறித்து, அமைதியான நிலவரம் தொடரவும், அரசியல் சூழ்நிலைகளுக்கான நல்ல முடிவுகள் கிடைக்கப்பெறவும் வேண்டுமென தொடர்ச்சியாக செபம் செய்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. திருச்சபையின் நற்கருணை வழிபாடுகளுக்குப் பின் எம் நாட்டிற்காக இலங்கை அன்னையிடம் மன்றாடவும்.

மேதகு ஆயர். J. வின்ஸ்டன் S. பர்னாந்து, SSS. தலைவர், கத்தோலிக்க ஆயர் பேரவை.

மேதகுஆயர் டி.வலன்ஸ் மென்டிஸ், பிரதம செயலாளர், கத்தோலிக்க ஆயர் பேரவை.


## அரச, கிறிஸ்து பிறப்புவிழா கொண்டாட்டம் – 2018

### – அருட்பணி. அ. விக்ரர் சோசை மறைமாவட்ட குருமுதல்வர் –

கிறிஸ்து பிறப்பு விழாவை ஒட்டி இலங்கை அரசும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்துச் செல்லும். மேற்படி விழா இம்மாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00மணிக்கு மன்னார் நகரசபை விளையாட்டு திடலில் நடைபெற உள்ளது.

ஆண்டு தோறும் நடாத்தப்படுகின்ற அரச, கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்தை கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு திணைக்களம், மறைமாவட்ட ஆயர் இல்லம், மாவட்ட அரச திணைக்களங்கள் இணைந்து சிறப்பாக கொண்டாடி வருகின்றன.

➡ 14




## மன்னா அன்பு நெஞ்சங்களே!

பிறக்க இருக்கும் பாலகன் இயேசுவின் இறையாசீர் உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் நிறைவாகக் கிடைக்க ஆசிக்கின்றேன். மேலும் உங்களை நன்றி உணர்வோடு நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

கடந்து செல்லும் இந்த ஆண்டில் மன்னாவின் வளர்ச்சிக்காக கைகோர்த்து உதவியுள்ளீர்கள். இனிவரும் புதிய ஆண்டிலும் உங்கள் பணியை நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றேன். அமைதியின் அரசராம் இயேசு கொண்டுவந்த அமைதி உங்கள் உள்ளங்களில் நிலைக்க வாழ்த்தி, ஆசித்து, செபிக்கின்றேன். உங்களுக்கு எனது அன்பும், அருளும், சமாதானமும் நிறைந்த கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட வாழ்த்துக்களை மீண்டும் தெரிவிக்கின்றேன்.

*நிறைந்த ஆசியுடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா.*
*பதிப்பாசிரியர், மன்னா.* ●

# சலேசியன் சபைக்கு புதிய குரு

## அருட்பணி. அ. அன்ரன் ஞானராஜ் றெவ்வல்



வங்காலை புனித ஆனாள் பங்குத் திருச்சபையைச் சேர்ந்த திரு. திருமதி. றொசாயல் அந்தோனி றெவ்வல் தம்பதிகளின் ஆறாவது புதல்வன் அருட்பணி. அன்ரன் ஞானராஜ் றெவ்வல் அடிகளார் கடந்த 06.12.2018 அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களால் சலேசியன் துறவற சபையின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

15

# கிளறீசியன் சபைக்கு மூன்று புதிய குருக்கள்



எ.கி. பரிங்டன் லீனஸ்



அ. அபிலஸ்



தே. திபூசியஸ்

அமல மரியின் மறைபோதக மைந்தர்கள் (கிளறீசியன் சபை) துறவற குழுமத்தினைச் சேர்ந்த மூன்று திருத்தொண்டர்கள், புதிய குருக்களாக ஐப்பசி மாதம் 24ம் திகதி துறவற குழுமத்தின் ஸ்தாபகர் புனித அந்தோனிமரிய கிளாரடின் திருவிழா அன்று காலை 10.00 மணிக்கு யாழ். ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட்பணி. எ.கி. பரிங்டன் லீனஸ் (CMF) - சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப்பங்கு
அருட்பணி. அ. அபிலஸ் (CMF) - நெடுந்தீவு, புனித பற்றிமா ஆலயப்பங்கு
அருட்பணி. தே. திபூசியஸ் (CMF) - முத்தரிப்புத்துறை, புனித செங்கோல் மாதா ஆலயப்பங்கு

பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருமணிகளுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது. ●

## துயர் பகிர்கின்றோம்



யாழ். மறைமாவட்டத்தின் அ.ம.தி.கள் குழுமத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் வேதநாயகம் அ.ம.தி. மற்றும் திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி வீஜினி குரூஸ் (வங்காலை) ஆகியோர் இறைபத மடைந்துள்ளார்கள்.

இவர்கள் இருவரும் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மறைமாவட்டங்களில் பல முக்கிய திருமறைப் பணிகளை பொறுப்பேற்று திறமையாக செய்து முடித்துள்ளார்கள்.

இவர்களது ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற செபிக்கும்படி மன்னா, இறைமக்களை கேட்டு நிற்கின்றது. ●

## அருட்பணி. இ. செபமாலை, திரு. கொன்சன்ரைன் மனித உரிமைகள் மற்றும் சமூக நலன் முதுமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார்கள்.





மனித உரிமைகள் மற்றும் சமூக நலன் தொடர்பான முதுமாணி கற்கை நெறியினை ஐரோப்பிய பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்து, கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு நிகழ்வின்போது அருட்பணி. இ.செபமாலை அடிகளார் அவர்களுக்கு மனித உரிமைகள் மற்றும் சமூக நலன் முதுமாணி பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

14

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும் திருச்சிலுவைக் கன்னியர்கள்



மன்னார் மறைமாவட்டம் ஆத்திக்குளி முருங்கனைச் சேர்ந்த அருட்சகோ. றஜனி அந்தோனிப்பிள்ளை, யாழ் மறைமாவட்டம் மண்டைதீவைச் சேர்ந்த அருட்சகோ. சுகந்தி பேனாட், கிளிநொச்சி மறைக்கோட்டம் உதயநகர் மேற்கைச் சேர்ந்த அருட்சகோ. நிர்மலா யோசப் இவர்கள் தங்களுடைய 25 வருட துறவற வாழ்வில் இறைவன் ஆற்றிய அரும் செயல்களுக்காக விசேட நன்றித்திருப்பலியினை நீர்கொழும்பில் உள்ள திருச்சிலுவை சபை மாகாண இல்லத்தில் மார்கழி 15ஆம் திகதி ஒப்புக்கொடுத்தனர். அருட்சகோதரி றஜனி அந்தோனிப்பிள்ளை அவர்களின் 25ஆவது நன்றித்திருப்பலி மார்கழி மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு முருங்கன் ஆத்திக்குளி புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். ●

# பாராட்டுகின்றோம்



செல்வி விக்ரர் கிபிசிக்கா



செல்வி பேர்சி மெபோனாறீனி

மன். பொன்தீவு கண்டல் றோ.க.த.க. பாடசாலையில், ஆசிரியர் பற்றாக்குறை இருந்தபோதிலும் 2 மாணவிகள் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். செல்வி. பேர்சி மெபோனா றீனி 176 புள்ளிகளும், செல்வி. விக்ரர் கிபிசிக்கா 155 புள்ளிகளும் பெற்று பாடசாலைக்கும், பெற்றோருக்கும், பங்கிற்கும் பெருமை சேர்த்துள்ளனர். இம்மாணவிகளையும், பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோரை பொன்தீவுகண்டல் பங்குத்தந்தையும், பங்குமக்களும் பாராட்டி வாழ்த்துகின்றனர். ●

# காலநிலை மாற்றம் குறித்து ஐ.நா.வின் வேண்டுகோள்



காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை அமுல்படுத்துவது நாடுகள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப முக்கியமானது என காலநிலை மாற்றம் (Cop24) குறித்து போலந்து நாட்டின் Katowice நகரில் தொடங்கியுள்ள உலக உச்சி மாநாட்டில் உரையாற்றிய ஐ.நா. பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரெஸ் அவர்கள் உலகத் தலைவர்களிடமிருந்து நான்கு காரியங்களை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். (இம்மாநாட்டில் 150 இற்கும் அதிகமான உலகத் தலைவர்கள் பங்குகொண்டனர்.) இவ்வாறு கூறிய கூட்டேரெஸ் அவர்கள் நம் பூமிக்கோளத்தின் வருங்காலத்தைப் பாதுகாப்பதற்கு அதிகமான செயற்பாடுகளும், ஆர்வமும் அவசியம். அதிகமான நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

15

## திரு. யோசேப் ஆரோக்கியம் குரூஸ், திரு. செபஸ்ரியாம்பிள்ளை தேவநாதன் கத்தோலிக்க விருதை (Dharmaprabashueara Salutation 2018) பெற்றுக் கொண்டனர்



திரு. செ. தேவநாதன்



திரு. யோ. ஆரோக்கியம் குரூஸ்

கடந்த 06ஆம் திகதி, இலங்கை திருஅவையினால் முதல்முறையாக நடாத்தப்பட்ட கத்தோலிக்க விருது வழங்கும் வைபவத்தில், வங்காலைப் பங்கைச் சேர்ந்த திரு. யோசேப் ஆரோக்கியம் குரூஸ் அவர்கள் நாடகத்துறைக்கான கத்தோலிக்க தேசிய விருதினையும், பொன்தீவுகண்டலைச் சேர்ந்த செபமாலை செபஸ்ரியாம்பிள்ளை தேவநாதன் அவர்கள் இசைத்துறைக்கான கத்தோலிக்க தேசிய விருதினையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களது இக்கத்தோலிக்க கலைத்திறமைகளை இனங்கண்டு, இவர்களை கிறிஸ்தவ கலை உலகிற்கு அறிமுகப்படுத்துவதில் மன்னார் மறைமாவட்டம் பெருமையடைகின்றது. இவ்விருதினைப் பெற்ற கலைஞர்கள் இருவரையும், ஐந்து பேர்கொண்ட தெரிவுக் குழு, ஆயர், மற்றும் குருமுதல்வர் ஆகியோரின் வழிகாட்டுதலில், சமர்ப்பிக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தெரிவு செய்ததை இங்கு பதிவு செய்கின்றோம்.

இவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துநிற்கின்றோம். தொடர்ந்தும் இவர்களது கலைப்பயணம் சிறக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.

14

## மன்னார் மறைமாவட்டம்


## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### டிசெம்பர்

02. ஆலய திருவழிபாட்டுக்குழுவினரின் திருவிழா.
03. புனித சவேரியார் திருவிழா - சிலாவத்துறை, கீளியன்குடியிருப்பு, புளியங்குளம்.
   - மன்னார் புனித சவேரியார் ஆண்கள், பெண்கள் பாடசாலை தினம்.
   - யாழ் புனித சவேரியார் குருத்துவ கல்லூரி விழா.
04. புனித சவேரியார் - சுந்தரபுரம் (தரணிக்குளம்).
06. புனித நீக்கிலார் ஆலயத் திருவிழா - பட்டித்தோட்டம்.
08. புனித கன்னி மரியாளின் அமல உற்பவம் கடன் திருநாள்.
   - அ.ம.தி குருக்களின் விழா.
   - அமல உற்பவ அருட்சகோதரிகள் விழா.
   - புனித வெற்றிநாயகி திருவிழா - பேசாலை.
13. புனித லூசியா திருவிழா - பள்ளிமுனை.
25. கிறிஸ்து பிறப்பு பெருவிழா. கடன் திருநாள்.
   - திவ்விய மீட்பர் சபை அருட்சகோதரிகள் திருவிழா.
30. திருக்குடும்ப திருவிழா, திருக்குடும்ப அருட்சகோதரிகள் விழா

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

-மன்னா நிர்வாகம்-

**விசேட செய்திகள்**

# புனித செபஸ்தியார் பேராலயப்பங்கு முதியோர் தின விழா





மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்கின் மூத்தோர் தின விழா, இவ்வாண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15மணி திருப்பலியுடன் ஆரம்பமாகியது. அதிவந்தனைக்குரிய ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில், ஐந்து குருக்கள் இணைந்து திருப்பலியினை நிறைவேற்றினர். ஆயர் தமது திருவுரையில் மூத்தோரை வாழ்த்தியதுடன், அன்பின் கருவிகளாக நாம் இணைந்து வாழ வேண்டுமெனவும், இலங்கையில் எந்த மறைமாவட்டத்திலும் இல்லாத வகையில் மன்னார் மறைமாவட்டத்தில் மட்டும் இந்த முதியோர் சங்கங்கள் சிறப்பாக இயங்கி வருவதாகவும் இத்திட்டத்தைப் பொறுப்பேற்று இயக்கிவரும் அருட்பணி. ஒல்பன் ராஜசிங்கம் (அ.ம.தி.) அவர்களை பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

➡ 15

# “கிறிஸ்தவக் கற்கைகள் பற்றிய பன்னாட்டு ஆய்வு மாநாடு”






இம்மாதம் டிசம்பர் 07, 08ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்சொல்லப்பட்ட சர்வதேச மாநாடு நடைபெற்றது. “புதியதோர் கிறிஸ்தவ மனிதநேயப் பண்பாட்டை நோக்கி” எனும் மையப்பொருளில் இம்மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் தனியாகவும், சமாந்தரமாகவும் 18 அமர்வுகள் நடைபெற்றன. கலந்து கொண்டவர்கள் பல குழுக்களாக பிரிக்கப்பட்டு வெவ்வேறு தலைப்புக்களில் பொது அமர்வும், குழு ஆய்வும் இடம்பெற்றன. யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் இதில் பங்கேற்றனர். யாழ். பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவர் அருட்திரு. போல் றொகான் அடிகளார் இம்மாநாட்டைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். ●



# போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடும் கத்தோலிக்கர்களை திருச்சபையிலிருந்து விலக்கி வைக்க வேண்டும்.

**– கர்தினால் அதிமேதகு மெல்க்கம் ரஞ்சித் ஆண்டகை –**

“இந்நாட்டிற்கு போதைப்பொருளைக் கொண்டு வந்து, அவற்றை விநியோகித்து பலமுறைகளில் பிள்ளைகளை போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் கத்தோலிக்கர்கள் இருப்பின் அவர்களை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலக்கி விடவேண்டும். அவர்களுக்கு திவ்விய நற்கருணை வழங்க வேண்டாம் என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை 25.11.2018 அன்று ஞாயிறுதினம் ஜா-எல துடெல்லை புனித அடைக்கல அன்னையின் தேவாலயத்தில் இடம்பெற்ற “மன்றாட்டினால் விடுதலையடைதல்” எனும் கருப்பொருளுடன் அமைந்த, போதைப்பொருள் ஒழிப்பிற்கான விசேட வழிபாட்டில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மறையுரை ஆற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் எம் பிள்ளைகளை அழிவுக்கு இட்டுச்செல்வதுடன், எளிமையான குடும்ப வாழ்க்கை வாழ்வோரது குடும்பங்களை அழிப்போர்கள் கத்தோலிக்க மதத்தை பின்பற்றுவோர்களானால் அவர்களை கத்தோலிக்கர்கள் எனக் கூறமுடியாது. இவ்விடயம் குறித்து எமது திருத்தந்தையும் கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு உழைக்கும் பணமானது விரைவாக அழிந்து, சாம்பலாகிவிடும். இதற்கு என்றாவது ஒருநாள் கடவுளுக்கு கணக்குக் கொடுக்க வேண்டிவரும். இவற்றை எம் நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை எம் நாட்டுத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பமுனுகம மற்றும் கந்தானை வட்டாரங்களில் வசிக்கும் இறைமக்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கான பதாதைகளை கையிலேந்திக் கொண்டு, துடெல்ல தேவாலய பூமிக்கு பவனி மூலம் வருகை தந்தனர். “சீதுவை சுபவத் அரண” நடுநிலைய இயக்குனர் அருட்பணி. டெரல் கூஞ்ஞு அவர்கள் இவ் வழிபாட்டை நடத்தினார். நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது. இதில் அவ்வட்டாரக் குருவானவர்களும், இறைமக்கள் பெரும்பாலானோரும் கலந்து கொண்டனர். ஜா-எல பங்குத்தந்தை அருட்பணி. பிரிய ஜயமான்ன அடிகளார் உள்ளிட்ட அவ்வட்டாரக் குருக்கள் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். ●

# வரலாற்றில் 150 ஆவது ஆண்டுக்குள் தடம்பதிக்கும் புனித மாட்டீனார் சிறிய குருமடம்.





யாழ். மறைமாவட்ட புனித மாட்டீனார் சிறய குருமட திருவிழா 11.11.2018 ஞாயிற்றுக்கிழமை குருமட அதிபர் அருட்பணி. பாஸ்கரன் தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. முற்பகல் 11.00மணிக்கு திருநாள் திருப்பலி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து மாட்டீனார் குருமட கொடியேற்ற நிகழ்வும், குருமடத்தின் யூபிலி ஆண்டை ஆரம்பிக்கும் நினைவுச்சின்ன திரை நீக்கமும் இடம்பெற்றன.

மாலை, விளையாட்டு நிகழ்வுகள் குருமட மைதானத்தில் நடைபெற்றன. 150 ஆண்டுகளை நோக்கி வரலாற்று தடம்பதிக்கும் யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் சிறிய குருமடம் யாழ். மறைமாவட்டத்தில் கடந்த 149 ஆண்டுகளாக குருக்களை வழங்கும் ஆரம்ப குருத்துவ உருவாக்கலின் தொட்டிலாகத் திகழ்ந்து வருகின்றது. புனித மாட்டீனார் சிறிய குருமடம் 2019ஆம் ஆண்டு தன் 150 ஆண்டு (1869 - 2019) நிறைவை எதிர் நோக்கியுள்ளது. ●

# புனித யோசேவாஸ் இறையியல் கல்வியக டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பம்.



எமது மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இறையியல் கல்வியக டிப்ளோமா வகுப்புக்கள் 2019ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பமாகின்றன. மூன்று ஆண்டுகள் நடைபெறும் இந்த டிப்ளோமா வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும். ஏற்கெனவே நடைபெறும் குறுங்கால இறையியல் கற்கை வகுப்புக்கள் மார்கழி மாதத்துடன் முடிவடைந்து வருட ஆரம்பத்தில் அதற்கான பரீட்சை இடம்பெறும். புதிதாக இந்த டிப்ளோமா வகுப்புக்களில் பங்கெடுக்க விரும்புவோர் இறையியல் கல்வியகத்திதுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மார்கழி 30ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு இயக்குனர் கேட்டுக்கொள்கின்றார். ●

*அருட்பணி. ப. டெஸ்மன் குலாஸ்,*
*இயக்குனர் புனித யோசேவாஸ் இறையியல் கல்வியகம்,*
*இல: 153, தாழ்வுபாடு வீதி, மன்னார். 077-3077134*

# மன்னாரில்

## ஆற்றுப்படுத்தலுக்கான பயிற்சி நெறி

மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி, திருவிவிலிய அருட்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் புனித வளன் மறைக்கல்வி நிலைய இயக்குனர். அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா 02.12.2018 தொடக்கம் 05.12.2018 வரை ஞானோதயம் தியான இல்லத்தில் இலங்கை வேதாகமச் சங்கத்தின் அனுசரணையோடு ஆற்றுப்படுத்துனர்களுக்கான பயிற்சி நெறியை ஒழுங்குபடுத்தியிருந்தார். கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தேசிய குடும்பப் பணி இயக்குனர் அருட்பணி. குளோட் நோனிஸ் அடிகளார், அருட்சகோதரி துசிக்கா, திரு.றோமுலஸ் பெர்னாண்டோ ஆகியோர் வளவாளர்களாகப் பயிற்சிகளை வழங்கினர். ஆரம்ப நிகழ்வில் இலங்கை வேதாகமச் சங்கத்தின் பொதுச் செயலாளர் வண.பிறியந்த விஜயகுணவர்த்தன அவர்களும், மன்னார் மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்பணி. ச.சவுல்நாதன் அவர்களும் கலந்து கொண்டனர்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு இலங்கை வேதாகமச் சங்கத்தின் இணைத் தலைவராக இருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராக வருகைதந்து சான்றிதழ்களை வழங்கினார். மன்னார் மறைமாவட்ட புனித யோசேவாஸ் பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. ச.எமிலியானுஸ்பிள்ளை, மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. அ.லக்ஸ்ரன் டீ சில்வா ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். ●

**“கிளர்ச்சியை இல்லாதொழிக்க செயற்படுங்கள்”**

# மதச் சம்மேளனத்தின் மதத் தலைவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்

இன்று எம் நாடானது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் கிளர்ச்சிகரமான அரசியல் வன்முறைகள் நிமித்தம், எம் நாட்டில் அமைதியற்ற நிலை உருவெடுத்துள்ளமையால் எம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் சீர்குலைக்கப்பட்ட நிலையில் உள்ளன. இந்நிலைமை மேலும் தொடராது இதற்குத் தீர்வு காண்பது குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு உங்களுக்கு இருக்கின்றது என மதச் சம்மேளனத்தலைவர்கள் ஜனாதிபதியிடமும், அமைச்சர்களிடமும் கேட்டுக்கொண்டதாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு. வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகை அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

பொதுக் கலந்துரையாடல் மூலம் அரசியல் யாப்புக்கும், சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப நிலையான அரசைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதனை ஏற்றுக்கொள்வதற்கு பொறுப்புடன் செயற்படுதல், நாட்டில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, ஜனநாயகத்திற்குட்பட்ட கொள்கைகளை பாதுகாத்துக்கொண்டு அவற்றை உறுதிசெய்து, நாட்டின் நீதியை நிலைநாட்டவும் அமைதியை நிலைநாட்டவும் செயற்படுதல், நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றம், நன்மைகளை நோக்காகக் கொண்டு நல்லாட்சியை ஏற்படுத்துதல், இத் தர்மச் செயலை சீர்குலைக்காது மக்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பதில் தேடுதல் இவ்விரு தரப்பினர்களினதும் பொறுப்பாகும். இதனை விசுவாசத்துடன் செயற்படுத்துவதற்கு, ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகரமான நிலைக்கு தீர்வு காண்பதுடன், நாட்டை மீண்டும் சமத்துவ நிலைக்குக் கொண்டு வருவது உங்கள் எல்லோரினதும் கடமையும், பொறுப்புமாகும் என்பது மதத் தலைவர்களின் கையொப்பத்துடன் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ●

# கிறிஸ்து பிறப்பு சிறப்பிதழ்

- திரு. எம்.எஸ்.ஏ. ஒஸ்வேல்ட், ஓய்வுநிலை சிரேஸ்ட உப அதிபர், கொழும்பு -

# "கிறிஸ்மஸ் பற்றிய செய்திகள்"

## கிறிஸ்துவின் பிறப்புரிமை




அக்காலத்தில் அகஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையை கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தான். அதன்படி சீரிய நாட்டு ஆளுனராக குளோனியு என்பவர் இருந்தபோது முதன் முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. தம் பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். அப்போது தாவீதின் மரபுவழி யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு பெயரை பதிவு செய்ய யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றனர். மரியா கருவுற்று இருந்தார். அவர்கள் அங்கிருந்த போது மரியாவிற்கு பேறுகாலம் வந்தது. அவர் தம் மகன் கிறிஸ்துவை மார்கழிமாதம் 25ஆம் திகதி பெற்றெடுத்தார். சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே குழந்தையை துணிகளினால் போர்த்தி சீவனத் தொட்டியில் கிடத்தினர்.

## கிறிஸ்மஸ் என்பது.



கிறிஸ்மஸ் என்பது வாக்கு மனிதனானார் என்ற உண்மையை உணர்த்துவதாகும். அத்துடன் கடவுள் நம்முடன் என்ற யதார்த்தத்தைக் கூறுவதாகும். மேலும் இறைவனின் மகன், பாவம் தவிர மற்ற அனைத்திலும் மனிதரைப் போல வாழ்ந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றது. உலகில் நல்மனம் கொண்ட அனைவரும் இறைவனின் வாரிசுகள் என முரசு கொட்டுவதாகும். கிறிஸ்மஸ் விழா எமக்கு உண்மையான மகிழ்ச்சியையும், அமைதி, சமாதானத்தையும், நிறைவையும் உண்டாக்குகின்றது.

## கிறிஸ்மஸ் மாதம் மார்கழி




மார்கழி மாதம் என்றால் மல்லிகை நறுமணம் வீசுவதும், பனிக்குளிரும், வானத்தில் நட்சத்திரங்கள் பூத்துக் குலுங்கி ஒளிர்வதோடு மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும் காலமாகும். இக்காலத்தில் தான் கிறிஸ்மஸ் விழாவை கிறிஸ்தவ மக்கள் பெருமகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள். அன்றாட வாழ்வு சலிப்படையாமல், புத்துணர்வுடன் பாலன் குடில் அமைத்து, நட்சத்திர கூடுகளைக் கட்டி தொங்க விட்டு, கரோல் கீதங்களை இசைத்து, கிறிஸ்மஸ் தாத்தாவை வரவேற்று குதூகலமாக பட்டாசுவெடி, வாணவேடிக்கைகளை கொழுத்தி மகிழும் காலமாகத் திகழ்கின்றது.

## கிறிஸ்துவின் பிறப்பு விழா




கிறிஸ்துவின் மானிட பிறப்பானது நமக்கு ஆறுதலாகவும், சவாலாகவும் அமைகின்றது. மனுக்குலத்தை நோக்கி திரும்பியுள்ள கடவுளின் முகம்தான் கிறிஸ்து. இவர் எப்போதும் மாறாத, நிலையான, எல்லையில்லா கடவுளின் மகனாக நம்மத்தியில் எப்போதும் இருக்கின்றார். நமது வாழ்வை புதுப்பிப்பதுடன் அதற்கு அர்த்தத்தைக் கொடுக்கின்றார். அமைதியை, நிலையான சமாதானத்தை, நிரந்தர மகிழ்ச்சியைத் தருகின்றார். கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு என்பன எமது வாழ்வின் எழிச்சிகளாகும்.

## கிறிஸ்மஸ் வாழ்த்து



மார்கழி 24ஆம் திகதி இரவு 12.00 மணி திருப்பலி நிறைவு பெற்றதும் பாப்பரசர், ஆயர்கள், அருட்தந்தையர்கள் மக்களை நோக்கி "Happy Christmas" என்று நல்வாழ்த்துக்களைக் கூறி மகிழ்வுடன் விடை பெற்றதும் மக்கள் அனைவரும் சந்தோசத்துடன் ஒருவரை ஒருவர் கை குலுக்கி, முகம் மலர்ந்து ஆரத் தழுவி "Happy Christmas" என்று அருட்பணியாளர் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கு வாழ்த்துக் கூறும் எமது Christmas வாழ்வின் பெருமைக்குரிய விடயமாக அமைகின்றது.

## "கிறிஸ்மஸ் ஒளிவிழா"



கிறிஸ்து பிறப்பின் பெருமையை மகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்து ஒவ்வொருவருடமும் மார்கழி மாதத்தில் ஒவ்வொரு தேவாலயத்திலும் மற்றும் பாடசாலை, வேலைத்தளம், சமூக நிலையங்கள், வீதியின் முக்கிய இடங்களிலும் வெகு சிறப்பாக கிறிஸ்மஸ் ஒளிவிழா கொண்டாடப்படுவது வழக்கமாகி விட்டது. இவ்வேளையின் போது நத்தார் குடில்கள் அமைத்தும், நத்தார் மரம் நட்டு ஒளிரும் புல்கள் இணைத்தும், நட்சத்திர கூடுகள் கட்டியும், நத்தார் கீதங்கள் இசைத்தும், கரோல் நிகழ்வுகள், நத்தார் தாத்தாவின் நாட்டிய நிகழ்வும், நடனங்கள், நாடகங்கள், கிறிஸ்மஸ் பற்றிய சிறப்பு செய்திகள், போட்டிகள் என்பனவும் இடம்பெறுவதுடன் வெற்றி பெற்றோர்க்கும், சிறுவர்களுக்கும் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும். இந்நிகழ்வில் இன, மத, மொழி, வேறுபாடின்றி மக்கள் மகிழ்ச்சியாக பங்கெடுப்பது போற்றத்தக்க விடயமாகும்.

## அதிசய வான் வெள்ளி (வால் நட்சத்திரம்)




கிறிஸ்து பிறந்த போது வானத்தில் ஓர் அதிசய வால் வெள்ளி கீழைத்தேய நாடுகளில் தோன்றியது. அப்போது அந்நாடுகளில் வாழ்ந்து வந்த கஸ்பார், வெலிச்சோர். பல்தசார் என்ற மூன்று ஞானிகள் (மூன்று இராசாக்கள்) இதனைக் கண்டனர். மகிழ்ச்சியடைந்த இவர்கள் இதன் வழிகாட்டலில் பாலன் இயேசுவை தரிசிக்க பெத்லகேமுக்கு வந்தார்கள். வரும்போது பொன், தூபம், வெள்ளைப்போளம் என்பவற்றைக் கொண்டுவந்து பாலனுக்கு காணிக்கையாக கொடுத்தார்கள். இவர்களின் வழியாக கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி கீழைத்தேய நாடுகளில் உள்ளோருக்கு அறிவிக்கப்பட்டது.

## இடையர்களும், வானதூதர்களும்.



கிறிஸ்து பிறந்த நேரத்தில் அப்பகுதியில் உள்ள வயல்வெளியில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் மந்தைகளை காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ஆண்டவரின் வானதூதர்கள் அவர்கள் முன்வந்து நின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்கள் முன் ஒளிர்ந்தது. மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. வானதூதர் அவர்களிடம் "அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார். குழந்தையை துணிகளில் சுற்றி, தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதை காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றார். வானதூதர் அவர்களை விட்டு விண்ணகம் சென்ற பின்பு இடையர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி வாருங்கள் நாம் பெத்லகேமிற்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்த செய்தியை காண்போம் என்று கூறி புறப்பட்டு, பாலன் இயேசுவைக் கண்டு, வியப்படைந்து மகிழ்ந்தனர்.

## கிறிஸ்மஸ் பெல்




கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலியின் போது அருட்தந்தையர்கள் "உன்னதங்களில் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகுக" எனப்பாடும் போது உலகிலுள்ள சகல கத்தோலிக்க தேவாலயங்களிலுள்ள ஆலய மணிகள் ஒலிக்கப்பட்டு ஆலயத்திலுள்ள பாலன் குடில் திறக்கப்படும். இது கிறிஸ்துவின் பிறப்பை ஞாபகப்படுத்துகின்றது.

## கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிறங்கள்.




பச்சை, வெள்ளை, சிவப்பு நிறங்கள் அதிகமாக பாவிக்கப்படுகின்றன. இந்நிறங்களானது கிறிஸ்து இவ்வுலகில் பிறந்து, எமக்காக இரத்தம் சிந்தி பெற்றுத்தந்த முடிவில்லாத தூய்மையான புதுவாழ்வைக் குறிக்கின்றது.

சிவப்பு - இயேசுவின் இரத்தம்

வெள்ளை - தூய்மை நன்மை

பச்சை - அதனூடாக அவர் எமக்குத் தந்த முடிவில்லாத புதுவாழ்வு. ●

# கிறிஸ்து பிறப்பு சிறப்பிதழ்

## அன்பின் ஊற்றும், அருளின் பிறப்பிடமுமான விழாவே கிறிஸ்மஸ் விழா!

- கி. அருளப்பு விடத்தல் தீவு -

எந்தவொரு சிறப்புக் கொடையையும் மனிதன் இறைவனிடமிருந்து பெறுவதற்கு முதலில் அவன் தயாரிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு தயாரிப்புத்தான் இஸ்ராயேல் குலத்தில் பல நூற்றாண்டுகளாக தயாரிக்கப்பட்டு வந்தது! கடவுள் தன்னுடைய இறைவாக்கினர் மூலம் அவர்களை தயாரித்து வந்தார். மெசியாவின் வருகைக்காக அவர்கள் தயாரிக்கப்பட்டார்கள்!

இன்று நாம் ஒவ்வொருவரும் அந்த மெசியாவின் இரண்டாம் வருகைக்காக தயாரிக்கப்படுகின்றோம். இதுவே கிறிஸ்மஸ் விழாவின் முக்கியத்துவம். மீட்பர் ஆனதால் அவர் இயேசு ஆனார். அருட்பொழிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டதால் அவர் மெசியாவானார். எம்மோடு என்றும் தங்கியிருப்பதால் அவர் இம்மானுவேல் ஆனார். தாவீதின் வழி வந்ததால் தாவீதின் குமாரரானார். எம் ஒவ்வொருவரையும் அவர் அன்பு செய்வதால் நல்ல மேய்ப்பரானார். நம்முடைய பாவங்களைப் போக்கியதால் கடவுளின் செம்மறியானார். அகில உலகை ஆண்டு நடத்துவதால் உலக அரசரானார். அந்த உலக இரட்சகரின் பிறப்பு விழாவைத்தான் நாம் கொண்டாடுகின்றோம்.

மார்கழி பிறந்தால் மண் குளிரும். மரிமகன் பிறந்தால் மனம் குளிரும். இயேசு பிறப்பது மீட்புக்காக. அந்த மீட்பை அடைவோம் யாவருமே! மனிதனின் முழுமை இறைவனின் மகிமை. மனிதனின் மகிழ்ச்சி, இறைவனின் இதய நெகிழ்ச்சி. கடவுளைத்தேடும் மனிதனை கடவுளே தேடி வருகின்றார். எட்டாக் கனியென எட்ட வைக்கப்பட்ட கடவுள் கிட்ட வந்து நலம் விசாரிக்கின்றார். தெய்வம் மண்ணில் கலந்தது. மானிடத்தில் கரைந்தது. படைப்பிற்குள் சங்கமித்தது. புனிதம் ஒன்று மனிதமானது. கடவுளின் மகன் இயேசு காலத்திற்கு உட்பட்டவராகத் தம்மையே கையளிக்கின்றார். இயேசு என்ற மனிதத் தன்மை இன்று நமக்கு கூறுவதென்ன? நான் உங்கள்



ஒவ்வொருவரின் உள்ளத்திலும் பிறக்க வேண்டும். என் எளிமையான கொட்டில், நீங்கள் தான். என் ஒளியின் பிரகாசம் உங்கள் ஒவ்வொருவரிலும் வீச வேண்டும். இந்த உலகில் நீங்கள் எனக்கு உயிருள்ள சாட்சிகளாக வாழத்தான் நான் உங்களைப் பிறப்பித்தேன்! இது தான் என் பிறந்த நாளில் நான் உங்களுக்குத் தரும் செய்தி. நல்லதையே நினையுங்கள். நல்லதையே பேசுங்கள். நல்லதையே செய்யுங்கள். என் பிறப்பானது உங்கள் ஒவ்வொருவரையும் என் மீட்புப் பணிக்கு அழைக்கின்றது. நம் குடும்ப வாழ்வு இறைவனை சந்திக்கும் கொண்டாட்டமே. கிறிஸ்மஸ் வந்தாலே காலநிலைகளில் மாற்றம், சூழ்நிலைகளில் மாற்றம். எம் ஒவ்வொருவரின் மனநிலைகளிலும் மாற்றம்.

அதாவது இன, மத, மொழி வேறுபாடின்றி நம் எல்லோருக்கும் சந்தோசமான விழாவே கிறிஸ்மஸ். இது கிறிஸ்மஸ் சந்தோசமா? கிறிஸ்து பிறப்பு சந்தோசமா? கிறிஸ்மஸ் சந்தோசமென்றால் அது பண்டிகைக் காலம் முடிய நின்று விடும். கிறிஸ்து பிறப்பு சந்தோசம் அப்படிப்பட்ட ஒன்று அல்ல! அது அந்த உன்னதமானவரோடு நாம் கொண்டுள்ள உறவை மற்றவர்களோடு சேர்ந்து பகிர்ந்து கொள்வதில் தான் தங்கியுள்ளது! அப்படிப்பட்ட ஓர் பகிர்வைத் தான் அந்த மேய்ப்பர்கள் செய்தார்கள். ஆண்டவரின் தூதர் அவர்கள் முன் தோன்றி அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார். (லூக்கா 2.10.11 ) இதைத்தான் அந்த மேய்ப்பர்கள் தங்களைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் அறிவித்தார்கள். அப்படிப்பட்ட ஓர் சான்று வாழ்வு வாழத்தான் நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம்!

வாக்கு மனிதரானார். நம்மிடையே குடி கொண்டார். பொய்மையில் இருந்து மெய்மைக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும், இருளில் இருந்து ஒளிக்கும் இட்டுச் செல்லவே ஆண்டவர் இயேசு வந்தார். தத்துவ ஞானம் புத்துயிர் பெற்று யூத நிலத்தினிலே. சத்திய வேதம் நின்று தழைத்தது தரணி மீதினிலே. எத்தனை உண்மைகள் வந்து பிறந்தன இயேசு பிறந்ததிலே! இத்தனை நாளும் மானிடன் வாழ்வது இயேசுவின் வார்த்தையிலே மண்ணிடையே இயேசு மறுபடி வருவார் என்பதும் சத்தியமே. புண்கள் இருக்கும் வரையில் மருந்து தேவை நித்தியமே! விண்ணரசமையும் உலகம் முழுவதும் இது தான் தத்துவமே எண்ணும், எழுத்தும் எல்லாம் அவரே இயேசுவை நம்புவோமே கேட்க செவியுள்ளோர் கேட்கட்டுமே. ●

## "பாலனுக்கு கொடுத்த பரிசு"

- திருமதி. மேரி மெக்டலீன் ஜெயக்கெனடி, வேப்பங்குளம், வவுனியா -

கிறிஸ்மஸ் திருப்பலி முடிந்து வந்து இரண்டு மணியாகிவிட்டது. அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் உறங்கிக்கிடந்தனர். ஆங்காங்கு வெடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தது. விது புரண்டு புரண்டு படுத்துக் கொண்டான். அவனுக்கு நித்திரை வரவில்லை. வெளியே வந்து விறாந்தையில் வைத்திருந்த பாலன் குடிலைப்பார்த்தான். கலர் லைற் மிகவும் அழகாக மின்னிக்கொண்டிருந்தது. பலூன்களாலும், சோடினைகளாலும் பாலன் குடில் மிகவும் அழகாக காட்சியளித்திருந்தது. ஆனாலும் அவனுக்கு திருப்தியில்லை. மீண்டும் போய் படுத்துக் கொண்டான். அவனுக்கு தூக்கம் வரவில்லை. தான் அப்படி செய்திருக்கக்கூடாது என பிஞ்சு மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று எழுந்த ரவி விது நித்திரை கொள்ளாதிருப்பதைப்பார்த்து 'என்ன விது' எனக் கேட்டார். ஒன்றுமில்லையப்பா நான் படுக்கிறேன் என்று பெட்சீற்றால் முகத்தை மூடிக்கொண்டான். அவனுக்கு நித்திரை மிகத்தொலைவிலிருந்தது.

ஆறுவயதுச் சிறுவன் விதுசன். அவனுக்கு ஒருவயதாக இருக்கும் போது தாய் இறந்து விட்டார். தந்தையின் அரவணைப்பிலும், அம்மம்மாவின் பாசத்திலும் வளர்ந்தான். அவனுக்கு பத்து வயதில் ஒரு அக்கா இருந்தாள். தாயின் அரவணைப்பும், அன்பும் அவனுக்கு கிடைக்கவில்லை. தாயின் படமொன்று மேசை மீது இருந்தது. அதை அடிக்கடி முத்தமிடுவதும், தன்னுடன் வைத்துக்கொள்வதுமாக இருந்தான். முதலாம் வகுப்பில் படிக்கும் அவனது துடுக்குத்தனமும், கேள்விகளும் அனைவரையும் பிரமிக்கச் செய்தது. வகுப்பில் மிகவும் சுட்டித்தனம் மிகுந்தவனாக காணப்பட்டான். இதனால் எல்லோருடைய அன்புக்கும் உரியவனானான். தந்தை ரவி புடவைக்கடை ஒன்றில் வேலை செய்தார். அவ்வருமானம் சாப்பிடுவதற்கே போதுமானதாக இருந்தது. வறுமையிலும் பிள்ளைகளுடைய தேவைகளையும், விருப்பங்களையும் ரவி நிறைவேற்றி வந்தான்.

விதுவிற்கு நித்திரை வரவில்லை. மீண்டும் எழுந்தான். வெளியே வந்து பாலன் குடிலைப்பார்த்தான். பாலனைத் தொட்டு வணங்கினான். இதனைக்கண்ட அவனது அம்மம்மா "விது நீ படுக்காட்டில் லைற்றை நிப்பாட்டிப்போடுவேன்'' எனக் கூறியதால் ஓடிச் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டான். அவனுக்கு விபரம் தெரிந்த நாள் தொடக்கம் கிறிஸ்மஸ் என்றதும் மிகவும் சந்தோசம். பாலன் செற்றை எடுத்துப்பார்ப்பதும், வைப்பதுமாக இருப்பான். தந்தை ரவி கொழும்பில் இருந்து அழகான பாலன் செற்றினை வாங்கி வந்திருந்தான். ஒரு நாள் அலுமாரியில் வைத்துப்பாலன்



செற்றை பூட்டிவிட்டதால் திறப்பைத் தேடி எடுத்து அலுமாரியைத் திறந்து பாலன் செற்றைத் தூக்கும் போது மரியன்னையின் சுருவம் உடைந்து விட்டது. ஒட்டமுடியாத படி துண்டு துண்டாகக் கிடந்தது. விது பயத்தினால் அழுதான். அம்மம்மாவிடம் இரண்டு அடியும் வாங்கி விட்டான். இம்முறை பாலன் குடில் வைப்பதில்லை என ரவி சொன்னதால் மேலும் கவலை அவனை ஆட்கொண்டது. தனது நண்பர்களிடம் மரியாளின் சுருவம் ஒன்று தரும்படி கேட்டான். யாரும் கொடுக்கவில்லை. தனது உறவினர்களிடம் கேட்டான். எவரும் கொடுக்கவில்லை. விதுவின் பரிதாபத்தைப் பார்த்து தந்தை ரவி கடையில் விசாரித்தான். அங்கே தனியே சுருவம் கொடுப்பதில்லை. முழுவதுமாகத்தான் எடுக்கலாம். அது மூவாயிரம் என சொன்னார்கள். அப்பொழுது அவனிடம் வசதி இருக்கவில்லை. அன்று மார்கழி 24ஆம் திகதி, ரவி பாலன் குடில் தயாரிக்க ஆயத்தமானான். சவுக்கு, பலூன், வைக்கோல் எல்லாம் வாங்கிவந்து, ஏற்கனவே இருந்த சோடினைகளையும் வைத்து சோடித்து முடித்தான். மரியாளின் சுருவம் உடைந்ததால் அது வைக்கப்படவில்லை. விதுவிற்கு கவலை மேலிட்டது. பாடசாலையில் நடந்த ஒளிவிழாவில் சூசை, மரியா, பாலன் மிக அழகாக வைக்கப்பட்டிருந்ததனை நினைத்தான். தன்னால் தான் இப்படி ஆகிவிட்டதென எண்ணிக்கொண்டான்.

விது மீண்டும் எழுந்தான் ஓடிச்சென்று பாலன் குடிலைப் பார்த்தான். சூசையும், பாலனும் தனியே இருப்பது போல் அவனுக்கு தோன்றியது. ஏதோ யோசித்தவனாக ஓடிச்சென்று மேசையில் வைக்கப்பட்டிருந்த தாயின் படத்தை எடுத்துக்கொண்டு வந்து பாலனின் அருகில் வைத்தான். தாய் சிரித்துக் கொண்டிருந்தாள். தினமும் அவன் அப்படத்திற்கு முத்தமிட்டதால் அது சற்று பழுதடைந்திருந்தது. இப்பொழுது அவனுக்கு மிக திருப்தியாக இருந்தது. மீண்டும் பாலனை முத்தமிட்டுவிட்டு படுக்கச்சென்றான். நன்றாக உறங்கி விட்டான். காலை 7.00 மணியாகியும் விது எழும்பவில்லை. தந்தை ரவி வெளியே வந்து விறாந்தையிலிருந்த பாலன் குடிலைப் பார்த்தான். அப்படியே உறைந்து விட்டான். மரியாளின் சுருவம் இருக்க வேண்டிய இடத்தில் மனைவியின் படம் இருந்தது. கண்கள் பனித்தன. நித்திரை விட்டெழுந்த விது வெளியே வந்தான். பாலன் குடிலை தந்தை பார்த்துக்கொண்டிருப்பதை பார்த்தான். 'நான்தான் அப்பா வைத்தனான்' என்றான். அவனை கட்டியணைத்து முத்தமிட்டான் தந்தை ரவி. ரவியின் கண்ணிலிருந்து வந்த கண்ணீரை துடைத்தபடி 'ஏனப்பா' என வினாவினான். அதில் அம்மாவின் படம் வைக்கக் கூடாது 'நான் உனக்கு புதுப் பாலன் செற் வாங்கி தருகின்றேன்' என கூறிவிட்டு கடையை நோக்கி புறப்பட்டான். விது எதுவும் அறியாது பாலன் குடிலை பார்த்துக்கொண்டிருந்தான். ●

### காவிய நாயகன் பிறந்திட்டார்...!

அலை மோதும் வாழ்க்கையின் அல்லல்கள் தீர்த்திட,
ஆறுதல் தேடுவோர்க்கு அமைதி கிடைத்திட,
ஆருயிர் செல்வங்கள் அருள் பெற்று வாழ்ந்திட,
அமலனாய் உதித்திட்டார் நிமலனாம் திருப்பாலன்!



காரிருள் நீங்கி பேரொளி கிடைத்திட,
காவிய நாயகனாய் தலைமகன் பிறந்திட்டார்,
பாரினில் மாந்தர் பாங்குடன் வாழ்ந்திட,
பாலனாய் எம் தேவன் பாரிலே பிறந்திட்டார்!


ஊரிலே உள்ளவர் உவப்புடன் வாழ்ந்திட,
சீர் பெற்று சிறுவரின் கல்வியும் வளர்ந்திட,
ஏர் பிடிக்கும் மாந்தர் ஏற்றம் பெற்றிட,
சிறப்புடன் உதித்திட்டார் எம் தேவனாம் திருப்பாலன்!

பாமர மக்களின் பசி துன்பம் போக்கிட,
பரிதவிக்கும் மாந்தரின் உள்ளம் மலர்ந்திட,
பரலோக பரமபிதா எமக்களித்த திருப்பாலன்,
பஞ்சணைத் தொட்டிலில் பாங்குடனே பிறந்திட்டார்!

நெஞ்சார வாழ்த்துவோம் திருப்பாலன் இயேசுவை!
அஞ்சாமல் பெற்றிடுவோம் அவர் தரும் ஆசீரை!
கண்மூடி தொழுதிடுவோம் அவர் திருப்பாதத்தை!
பண்பாடி போற்றிடுவோம் அவர் திருநாமத்தை! ●

*- அ. ஜஸ்மின் ஷெரோன், ஆவணம், நானாட்டான். -*

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி, மன்னார்.



**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# கிறிஸ்து பிறப்பு சிறப்பிதழ்

## கிறிஸ்மஸ் விழா



இது உலகில் வாழும் அனைவரும் மொழி, மதம், இனம் என எந்தவித பாகுபாடுகளுமின்றி கொண்டாடும் விழாவாக மாறிக் கொண்டிருக்கின்றது. ஆனால் தொடக்க காலத்தில் "கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா தான்" மிகப் பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. உரோமையில் வாழ்ந்த பலர் குறிப்பாக அடிமைகள், ஏழைகள், அரசு அதிகாரிகள், போர் வீரர்கள் கிறிஸ்துவின் போதனையால் தூண்டப்பெற்று கிறிஸ்தவர்களாக மாறினர். உரோமை மன்னன் கான்ஸ்டன்டைன் அவருடைய தாய் ஹெலனின் வேண்டுதலால் மனம்மாறியது பெரும் மறுமலர்ச்சியையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியது. உரோமையில் "சூரியனின் பிறப்பு விழா" கிறிஸ்தவர்கள் அல்லாத உரோமையர்களால் ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 25ஆம் நாளில் கொண்டாடப்பட்டு வந்தது. இதனை "வெல்ல முடியாத சூரியனின் பிறப்பு விழா" என்று அழைத்தனர். காரணம் குளிரையும், பனியையும் போக்கி கதிரவன் உதயமாகும் நாளை விழாவாகக் கொண்டாடி வந்தனர். இத்தருணத்தில் கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் இயேசு கிறிஸ்துவை "உலகின் ஒளியாக" (யோவா 8:12), "நீதியின் அரசராக" ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் பிற சமய வழிபாட்டு முறையான "சூரிய பிறப்பு விழாவை" கிறிஸ்து பிறப்பு விழா என்று கொண்டாடத் தொடங்கினர். மேலும் உரோமையரின் அரசியல், சமய விழாவாக இருந்த "சூரியப் பிறப்பு விழா" உரோமை அரசன் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவனாக மாறி கிறிஸ்தவ மதத்தை அரசு மதமாக (State Religion) அறிவித்ததால் 'கிறிஸ்து பிறப்பு விழா' அரச விழாவாக மாறியது.

இதனால் உரோமை ஆட்சிக்குக் கீழிருந்த கிறிஸ்தவர்கள் "சூரியப் பிறப்பு நாளை" "இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு நாளாக" கொண்டாடி மகிழ்ந்தனர். எனவே உரோமையில்தான் முதல் கிறிஸ்மஸ் விழா கி.பி. 354இல் டிசம்பர் 25ஆம் திகதி கொண்டாடப்பட்டதற்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

இவ்வாறு பொருளுணர்ந்து கொண்டாடப்பட்ட கிறிஸ்மஸ் விழா, காலம் செல்லச்செல்ல பொருளை இழந்து வருகின்றது. உரோமையர்கள் தாங்கள் கொண்டாடிய சமய விழாவை கிறிஸ்தவர்களாக மாறிய பிறகு, கிறிஸ்து பிறப்பு விழாவாகக் கொண்டாடினர். இது அவர்கள் வாடிக்கையாக, சடங்காக அல்லாமல் வாழ்வாக மாறியது.

ஆனால் நாம் கொண்டாடும் விழா வாடிக்கை, வேடிக்கையாகிறதோ என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது. ஆகவே, நாம் கொண்டாட இருக்கின்ற கிறிஸ்து பிறப்பு விழா எமக்கும், எம் சமூகத்திற்கும், எம் அயலவர்க்கும் அர்த்தமுள்ள விழாவாக அமைய எம்மை ஆயத்தம் செய்வோம். ●

## வாழ்த்துக்கள்





### - ஜெயா பாலாஜி, முருங்கன் -

கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு சில நாட்களே இருந்தன. வீட்டில் ஒவ்வொன்றிலும் கிறிஸ்மஸ் தெரிந்தது. கதவுகளும், யன்னல்களும் புத்தாடையுடன் புன்னகைத்துக் கொண்டிருந்தன. தேடித்திரிந்து வாங்கிய முதலாம் தர வனிலாவின் மணத்தோடு கேக் சரியான பதத்தில் பரிமாற ஆயத்தமாய் இருந்தது. சமையலறை பளிச்சென்று அழகாய் விளங்கியது. பூசி விளக்கிய குத்துவிளக்கின் அழகு "என்னோடு போட்டியிட யாரால் முடியும்" என்று கேட்பது போல வரவேற்பறையை மங்களகரமாக்கிக் கொண்டிருந்தது.

மகன் குடிலை அலங்கரித்திருந்தான். வழமைக்கு மாறாக எதற்கும் பணம் செலவழிக்காமல் இயற்கைப் பொருட்களால் அழகாக அமைத்திருந்தான். நத்தார் முடிந்ததும் புதுவருடம் பிறக்க பாடசாலை ஆரம்பமாகிவிடும். ராஜன் படிக்கும் மேசை ஒழுங்காக அடுக்கப்பட்டு இருந்தது. கொப்பிகள், புத்தகங்கள் எல்லாம் பிறவுண் பேப்பர் உறை போட்டு ஸ்ரிக்கர் ஒட்டி மேலே பொலித்தின் உறை போட்டு நேர்த்தியாய் காட்சியளித்தன.

படி...படி...படி... நீ வாழ்வைப் படி

நீ படியாத போதிங்கு வாழ்வதெப்படி?

என்று அவை அழைத்துக் கொண்டிருந்தன.

"அம்மா" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தேன். ராஜன் சிறிது தயக்கத்தோடு "நானொன்று கேட்பேன் ஓமென்று சொல்வீர்களா?" என்றான். என் புன்னகையை சம்மதமாகக்கொண்டு தொடர்ந்தான். "சென்ற ஆண்டு ஒளிவிழாவில், பாடசாலையில் நான் பெற்ற பரிசுகளை எல்லாம் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றீர்களே! கொப்பிகள், கலர் பென்சில்கள், கொம்பாஸ்கள், புத்தகப்பைகள் எத்தனை நம்மிடம் இருக்கின்றன. அவற்றைத் தருகின்றீர்களா? அரவிந்தனுக்கும், அன்ரனுக்கும் கொடுப்போம். அவர்களிடம் துருப்பிடித்த கொம்பாஸ் பெட்டிகள் தான் இருக்கின்றன. புத்தகப்பைகளும் மிகவும் பழையன என்றான்.

என்னுடைய மகிழ்ச்சிக்காக மேலதிகமாக வைத்திருக்கின்ற பொருட்கள் வேறு பிள்ளைகளின் கல்வித் தேவைக்கு பயன்பெறுவது எவ்வளவு சிறந்தது. அதுவும் இந்த கிறிஸ்மஸ் நாட்களில் அதை உணராமல் போனதற்கு வருந்தினேன். "எடுத்துக்கொடு" என்றதும் உற்சாகமாக ஓடிச்சென்று அவர்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டவன் மீண்டும் அருகில் வந்து "அம்மா" என்றான். "நேற்று அன்ரனுக்கு காய்ச்சல் என்று பார்க்கப் போனேன்.

அவனுடைய அம்மாவின் பழைய சேலை ஒன்றால் போர்த்திக்கொண்டு படுத்திருந்தான். அப்பா இம்முறை நத்தாருக்கு எனக்கு வாங்கித் தந்தவற்றிற்குள் புதிய போர்வை ஒன்றும் இருக்கின்றது. அதை அன்ரனுக்கு கொடுப்போமா? என்னிடம் இருக்கிற போர்வை எனக்குப் போதும்" என்றான். அவனது குரலில் கவலை தெரிந்தது. "உன் விருப்பப்படி செய். போகும் போது கேக்கும் கொண்டு போ" என்றேன். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டு ஓடினான். அரவிந்தனதும், அன்ரனதும் முகங்கள் என் கண் முன் தோன்றின.

"இத்தகைய குழந்தை ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்கின்றான்" நற்செய்தி நினைவுக்கு வந்தது.

ராஜன் மிகவும் நேசிக்கின்ற குழந்தை இயேசு, செம்பருத்திப்பூக்கள் சூழ வீற்றிருந்து சிரித்துக் கொண்டிருந்தார். "வாழ்த்துக்கள்" என்று என் பிள்ளைக்கு சொல்வதாய் அந்த புன்னகை எனக்கு பொருள் தந்தது. ●

## விடியல் வருமா மனுக்குலத்திற்கு?

### - ம.டிஷாமினி, தாஸ்கோட்டம், வவுனியா -

மார்கழிப் பனியினிலே
மயக்கும் குளிரினிலே
மாட்டுத் தொழுவத்தினிலே
மரியின் மடியினிலே
மன்னவன் பிறந்தாரே!



பாவிகள் எம்
பாவங்கள் போக்கவே
பரம சுதனே
பரிவுடன் வந்தாரே
இடையர்களும், ஞானிகளும்
உம்மைக் கண்டு தொழவே
கீழ்த் திசையிலிருந்து
மகிழ்வுடன் வந்தனரே!



மனிதர்களுக்காக உம்மை
பலியாக்கத்தான்
மனுவுரு எடுத்து
உலகிற்கு வந்தீரோ?

மனிதருக்காய் உம்மை
பலியாக்க வந்தீரே - ஆனால்
இதையறியாத மானிடம் - இன்று
தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிறதே!
நீர் பிறந்த செய்தி
மனித வாழ்விற்கோர் எடுத்துக்காட்டுத்தான்.
மனிதனை மனிதனே அழிக்கும் நவீன யுகத்தில்
உம் பிறப்பு செய்தி அவசியமானதே!
அன்று வீடின்றி நீர்
மாட்டுத் தொழுவில் பிறந்தீர்
இன்று வீடின்றி பலர்
நிர்க்கதியாய் நிற்கின்றனர்



உம்முடைய பிறப்பு மூலம்
விடியல் வருமா மனுக்குலத்திற்கு? ●

## கிறிஸ்மஸ் தந்த பரிசு



அது ஒரு அழகிய கிராமம். அவ்வூரின் பெயர் சோலையூர். பெயருக்கு ஏற்றாற்போல் பூத்துக் குலுங்கும் பூக்களையும், பச்சைப் பசேலென காட்சியளிக்கும் வயல் வெளிகளையும் கொண்டு சோலையாகக் காட்சியளிக்கும். அவ்வூரிலே பல கிறிஸ்தவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அக்குடும்பங்களில் யோசப் என்பவரின் குடும்பமும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. அக் குடும்பத்தலைவர் யோசப் விவசாயம் செய்பவர். குடும்பத் தலைவி மேரி நல்ல குடும்பத்தலைவியாக குடும்பத்தை வழிநடத்துபவர். இவர்கள் இருவரும் தம் இரு பிள்ளைகளான துஷ்யந், கிறிஸ்ரீனா இருவரையும் நல்ல முறையில் வளர்த்து வந்தனர். பிள்ளைகள் இருவரும் நல்ல முறையில் வளர்ந்தனர். துஷ்யந் வங்கியில் வேலை செய்தான். கிறிஸ்ரீனா ஆசிரியையாக பணிபுரிந்தாள். துஷ்யந் வங்கியில் வேலை செய்யும் புஸ்பாவதி எனும் பெண்ணைத் திருமணம் செய்வதற்கு விருப்பப்பட்டான். அவ்வாறே புஸ்பாவதியும் விரும்பினாள். இவ்விடயத்தை இருவரும் தம் வீட்டில் தெரிவித்தபோது இரு வீட்டாருமே சம்மதம் தெரிவிக்கவில்லை. எனவே இருவரும் சேர்ந்து இவ்வூரை விட்டு சென்றுவிட முடிவெடுத்தனர். அவ்வாறே இருவரும் வேறு ஊருக்குச் சென்று திருமணம் செய்து தமது வாழ்க்கையை நல்லமுறையில் தொடர்ந்தனர்.

இவ்வாறு சில வருடங்கள் மகிழ்ச்சியாக தம் வேலையிலும் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர். ஆனால் திருமணம் செய்து 10 வருடங்களாகியும் பிள்ளைச் செல்வங்கள் கிடைக்கவில்லை. அதையிட்டு அவர்கள் இருவரும் மிகவும் மனம் வருந்தினார்கள்.

➡ 14


## பாலகன் முன் மனமாற்றம்

வதிவிடம் அகன்று குடியதன்
புதிய கணக்கெடுப்பு - புதிய
நடந்த தூரமோ அதிகம்
ஒதுங்கியதோ மாட்டுக் குடிலில்
நடுஇரவின் அமைதி
கடும் குளிரின் அவதி
பரமனின் திருமகன்
மரியன்னை மடியில்
பாடி மகிழ்ந்த வானதூதர்
கூடி வணங்கிய இடையர்
பாவத்தின் இருள் அகல
பாவிகளின் மனம் மாற்ற
வந்த நோக்கம் அதுவே
அந்த இறைவார்த்தை இதுவே
பிறந்த நேரம் காலமும் அல்ல
பிறந்த சூழ்நிலையும் அல்ல
மாலை விரும்பா மன்னன் முன்
பாவ அறிக்கை செய்து
தேவை நல்ல மனமாற்றம்
சேவை செய்து எம்மவர்
துயர் துடைக்க உழைப்போம். ●

## விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது!



விண்ணின் முத்தத்தை
மண்ணுக்குக் கொடுக்க
விடியல் ஒன்று இதோ
எம்மைத் தேடி வருகிறது!
பொய்மையில் இருந்து உண்மைக்கும்,
இருளிலிருந்து ஒளிக்கும்,
அழிவிலிருந்து அமரத்துவத்துக்கும்
அழைத்துச் செல்லும் விடிவெள்ளியாய் வருகிறது!
மாதா வயிற்றில் மகனாய் மலர்ந்த
மங்காத ஒளி - நம்மீது மழையாய்,
அருட்கொடைகளைப் பொழிய,



வானவர் கீதம் பாட வருகிறது. நம்மைத் தேடி
எங்களிடம் வருகிறது. எங்களுக்குள் வருகிறது.
ஒளியாக வருகிறது. நல்வழியாக வருகிறது.
அன்பாக வருகிறது. அருளாக வருகிறது.
விண்ணில் இருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது. ●

டேவிட் ஜெரோம் ஜதுசன், மாவிலங்கேணி.

உலகத் திருச்சபைச் செய்திகள்

# “எனது மரண வேளையில் அன்னை மரியை அழைத்து, எனக்கு அருகில் இருந்து, அமைதியைத் தாரும் என மன்றாடுவேன்.”

எமது இவ்வுலக வாழ்வுப் பயணம் மரணத்தில் முடியும் என்பது உண்மையாயினும் அது பற்றி எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலிய தொலைக்காட்சி தொடர் நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார். TV 2000 தொலைக்காட்சியில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் இரவில் ஒலிபரப்பாகிவரும், “Ave Maria” என்ற தொடர் நிகழ்ச்சியில், அருள்மிகப் பெற்ற மரியே என்ற செபம் பற்றிய சிந்தனைகளை வழங்கிவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார். இப்பொழுதும், எமது மரண வேளையிலும் என்ற வேண்டுதல் பற்றிய சிந்தனைகளை பகிர்ந்துகொண்டுள்ள திருத்தந்தை, அருள்மிகப் பெற்ற மரியே என்ற செபம் மீட்பின் மாபெரும் உண்மையோடு தொடங்குவதுபோல், பாவத்தின் கனியாகிய மனிதரின் நிலை பற்றிய உண்மையோடும் நிறைவடைகின்றது என்று கூறினார்.

சாத்தானும், ஏவாளும் மரணம் பற்றி சிந்திப்பதற்கு அழைப்பு விடுக்கின்றனர் என்றுரைத்த திருத்தந்தை, எனது மரண வேளையில் அன்னை மரியை அழைத்து, எனக்கு அருகில் இருந்து அமைதியைத் தாரும் என செபிப்பேன் என்றும் கூறினார். இன்றைய இளையோர் தனிமைமையாகவும் கைவிடப்பட்டதாகவும் உணர்வதற்கு சமூகத்தின் புறக்கணிப்பு

**நூலகத்தைப் பார்வையிட்ட திருத்தந்தை பிரான்சிஸ்**



கலாசாரமே காரணம் என்றும், அன்னை மரியாளைப் போன்று இன்றைய இளையோரும் ஊற்றுக்களில் வேரூன்றச் செய்யப்பட வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார். தற்கொலை பற்றி கூறிய திருத்தந்தை, இது மீட்பிற்கான கதவுகளை அடைப்பதாக உள்ளது எனவும், மரணத்தை இறுதி நீதிச் செயலாக நினைத்து பார்க்கின்றேன் எனவும் கூறியுள்ளார். ●

## மறைக்கல்வியுரை

### சட்டத்தொகுப்பு அல்ல, மாறாக வழிகாட்டிகள்



இறைத்தந்தையின் விருப்பத்திற்கு கீழ்ப்படிவதன் வழியாகப் பிறக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பில் தன் நிறைவைக் காண்கின்றது உண்மையான மனித வாழ்வு. ‘எனவே நான் சொல்கின்றேன். தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள். அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள். ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. தூய ஆவியின் விருப்பம் ஊனியல்பிற்கு முரணானது. தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும். இவையுள்ள இடத்தில் திருச்சட்டத்திற்கு இடமில்லை’ என புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமடலின் வார்த்தைகளை அடிப்படையாக வைத்து, பத்துக்கட்டளைகள் குறித்த மறைக்கல்வித் தொடரின் இறுதிப் பகுதியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

➡ 15

## இதயத்தில், குடும்பத்தில், உலகில் அமைதியைத் தேடுவோம்.



திருவருகைக் காலம் என்பது ஒருவர் தன் ஆன்மாவிலும், குடும்பத்திலும், உலகிலும் அமைதியைக் கட்டியெழுப்பும் வழிகளைத் தேடுவதற்குரிய காலம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மறையுரையாற்றினார். தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி வாசகங்களை மையப்படுத்தி மறையுரைக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, ஒவ்வொருவரும் தன் ஆன்மாவிலும், குடும்பத்திலும், உலகிலும் அமைதியை உருவாக்க எடுத்துவரும் முயற்சிகள் பற்றி சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆண்டவரின் வருகையின்போது எல்லாமே அமைதியில் வாழும் என்று இறைவாக்கினர் எசாயா உரைப்பதை குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குடும்பங்களில் கவலைகளும், போராட்டங்களும், சிறு, சிறு சண்டைகளும், பிரிவினைகளும் நிலவும்வேளை, அவற்றினை ஒன்றிணைக்கும் பாலங்களை அமைப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார்.

உலகில் அமைதி நிலவ எமது பங்கு என்ன? எமது அயலவரில், பாடசாலையில், வேலைத்தளத்தில், அமைதி நிலவ எவ்விதத்தில் உதவுகின்றேன்.

➡ 15

## நம் பொதுவான இல்லத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணைவோம்



போலந்து நாட்டில் நடைபெற்றுவரும் காலநிலை மாற்றம் குறித்த உலக உச்சி மாநாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சார்பில் திருப்பீட செயலர் அவர்கள் உரையாற்றினார். காலநிலை மாற்றம் குறித்த பாரிஸ் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப் படுவதற்கும், நம் பொது இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பதற்கும், உலகத் தலைவர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்று திருப்பீட செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள் உலக மாநாட்டில் கூறினார்.

போலந்து நாட்டின் Katowice நகரில், டிசம்பர் 2ஆம் திகதி தொடங்கியுள்ள காலநிலை மாற்றம் (Cop24) குறித்த உலக உச்சி மாநாட்டில் டிசம்பர் 3ஆம் திகதி உரையாற்றிய கர்தினால் பரோலின் அவர்கள், இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் 150ற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களுக்கும் ஏனைய பிரதிநிதிகளுக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நல்வாழ்த்தை முதலில் தெரிவித்தார். காலநிலை மாற்றம் குறித்து கடந்த ஒக்ரோபரில் வெளியிடப்பட்ட உயர்மட்ட குழுவின் அறிக்கையில் நம் பொதுவான இல்லத்தைக் கட்டியெழுப்புவதற்கும், உலகளவில் வெப்பநிலை அதிகரிப்பை மட்டுப்படுத்துவதற்கும் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் தேவைப்படுகின்றது என வலியுறுத்தப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிப் பேசினார் கர்தினால் பரோலின். மனிதரின் மாண்பை மதிப்பது, ஏழ்மையை அகற்றுவது, ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்தை ஊக்குவிப்பது.

➡ 15

## புலம்பெயர்வு குறித்த ஐ.நா. ஒப்பந்தத்திற்கு கத்தோலிக்கர் ஆதரவு



உங்களிடம் தங்கும் அந்நியர், உங்கள் நாட்டில் பிறந்தவரைப் போல் இருக்க வேண்டும். உங்கள் மீது நீங்கள் அன்புகூர்வதுபோல் அவர் மீதும் அன்புகூருங்கள். (லேவி. 19:34) புலம்பெயர்வு குறித்து ஐ.நா. நிறுவனம் கொண்டுவந்துள்ள உலகளாவிய ஒப்பந்தத்திற்கு, கத்தோலிக்கத் திருஅவையின் ஆதரவைத் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் ஐரோப்பிய கத்தோலிக்க திருஅவை உயர் அதிகாரி ஒருவர். புலம்பெயர்வு குறித்த ஐ.நா.வின் உலகளாவிய ஒப்பந்தம், டிசெம்பர் 11ஆம் திகதி, Marrakech இல் கையெழுத்து வைக்கப்படவிருப்பதை முன்னிட்டு, அறிக்கை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவரும், லக்சம்பர்க் பேராயருமான Jean-Claude Hollerich அவர்கள் இந்த ஒப்பந்தத்திற்கு ஐரோப்பிய திருஅவையின் ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

நம் சமுதாயங்களில் வாழ்கின்ற புலம்பெயர்ந்தோர் மற்றும் குடிபெயர்ந்தோரை வரவேற்று, பாதுகாத்து, ஊக்குவித்து, அவர்களை ஒன்றிணைப்பதற்கிருக்கும் கடமையை ஐரோப்பிய கத்தோலிக்கத் திருஅவை மீண்டும் உறுதிசெய்கின்றது என்றும் பேராயரின் அறிக்கை கூறுகின்றது.

➡ 15

## செபம் என்பது இதயங்களில் இயல்பாகவே எழுவது

ஓய்வற்ற பணிவாழ்விலிருந்து சிறிது நேரத்தையாவது ஒதுக்கி அமைதியில் செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் இயேசு.

வழக்கமாக டிசம்பர் மாதத்தின் முதல் வாரம் உரோம் நகரில் மிகவும் குளிர் நிறைந்ததாகவே இருக்கும். இருப்பினும் இவ்வாரம் மிதமான குளிருடனும், வெப்பத்துடனும் இருந்தபோதிலும் ஏற்கெனவே திட்டமிட்டபடி திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அரங்கிலேயே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைக்கல்வி உரை இடம்பெற்றது. அரங்கம் முழுவதும் திருப்பயணிகளால் நிரம்பி வழிய, முதலில் புனித லூக்கா நற்செய்தியின் 11ஆம் பிரிவின் முதல் திருச்சொற்களான ‘இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, “ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்” என்றார் என்பது வாசிக்கப்பட்டது. பின் இயேசு கற்பித்த செபம் குறித்து தன் மறையுரையை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

அன்புச் சகோதரர் சகோதரிகளே! இவ்வாரத்தினை நாம் இறைவன் கற்பித்த செபத்திற்கென அர்ப்பணிப்போம் என தம் மறைக்கல்வி உரையை ஆரம்பித்தார். ‘வானகத்திலுள்ள எம் தந்தாய்” என்ற செபம் இயேசுவின் சொந்த செப வாழ்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இயேசு தன் பகிரங்கப் பணி வாழ்வை ஆரம்பித்த நாளிலிருந்து, தன் ஓய்வற்ற பணிவாழ்விலிருந்து சிறிது நேரத்தையாவது ஒதுக்கி அமைதியில் செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தன் மக்களின் பொது வழிபாட்டுச் செபங்களில் அவர் பங்குபெற்றதோடு, தனியாகவும் செபித்தார். இந்த செப வாழ்வின் உள்ளார்ந்த ஆர்வத்தால் கவரப்பட்ட அவரின் சீடர்கள், அவரை நோக்கி, தங்களுக்கும் செபிக்கக் கற்றுத்தருமாறு கேட்கின்றனர் (லூக்.11:1). இந்த விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் விதமாக இயேசு அவர்களுக்கும், நமக்கும் ‘வானகத்திலுள்ள எம் தந்தாய்” என்ற செபத்தைத் தருகின்றார். இந்த செபத்தை நமக்கு கற்பிப்பதன் வழியாக தந்தையாம் இறைவனுடனான அவரின் நெருங்கிய உறவில் நம்மையும் கொணர்கின்றார். மனித இதயங்களில் செபம் என்பது இயல்பாகவே எழுகின்றபோதிலும், செபத்தை பலனுள்ள முறையில் எழுப்பும் வழிகள் குறித்து நாம் கற்றுக்கொள்ள முடியும். பரிசேயரும், வரிதண்டுபவரும் குறித்த இயேசுவின் உவமை எடுத்துரைப்பதுபோல், கடவுளுக்கு ஏற்புடையதாக இருக்கும் செபம் என்பது தாழ்ச்சியும், அன்பும் நிறைந்த இதயத்திலிருந்து எழுவதாகும். இயேசு கற்பித்த செபம் குறித்து ஆழமாகச் சிந்திக்கவுள்ள வரும்வாரங்களில், இயேசுவின் சீடர்களைப்போல் நாமும், இறைமகனை நோக்கி, உறுதியான விசுவாசத்துடன், ‘இறைவா எனக்கு செபிக்கக் கற்றுத்தாரும்” என வேண்டுவோம்.

இவ்வாறு மறைக்கல்வி உரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித கன்னிமரியின் அமல உற்பவத் திருவிழாவைச் சிறப்பிக்க உள்ளதைக் குறித்து எடுத்துரைத்து, குழந்தை இயேசுவை நம் இதயங்களில் வரவேற்க நம்மைத் தயாரிக்க உதவுமாறு விசுவாசம் மற்றும் இறைவனுக்கு கீழ்ப்படிதலில் நமக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக இருக்கும் அன்னை மரியிடம் நம்மை ஒப்படைப்போம் என கேட்டுக்கொண்டார். இறுதியில் அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

## கிறிஸ்மஸ் மரம், குடில், கடவுளின் கனிவைத் தியானிப்பதற்கு உதவி



வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் டிசெம்பர் 07ஆம் திகதி முதல் ஒளியுடன் மிளிர்ந்துகொண்டிருக்கும் 23 மீட்டர் உயரமுள்ள கிறிஸ்மஸ் மரம், இத்தாலியின் Pordenone மாநிலத்திலுள்ள Cansiglio வனத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம் 1982ஆம் ஆண்டு திருத்தந்தை புனித 2ஆம் ஜோன் போல் அவர்களால் தொடங்கப்பட்டது. கிறிஸ்மஸ் குடிலில் வைக்கப்பட்டுள்ள உருவங்கள் இத்தாலியின் வெனிஸ் நகருக்கருகிலுள்ள Jesolo கடற்கரை மணலால் ஆனவை.

➡ 15

# மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு – 2019



# முன்மொழிவுகள்



## தனிநபர் புதுப்பித்தல்

### தனிநபரின் முயற்சிகள் :

1. ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கு புதுப்பித்தல் தேவை என்பதை உணர்தல், விரும்புதல். அந்த உணர்வையும், விருப்பத்தையும் தனிமனிதரில் ஏற்படுத்த ஆவன செய்தல்.
2. சக்கேயுவைப் போன்று, ஊதாரி மகனைப் போன்று ஒவ்வொரு தனிநபரும் தன்னிலை உணர, தன் பாவங்களை ஏற்றுக்கொள்ள இறைவனிடம் திரும்பிவர தேவையான முயற்சிகளை மேற்கொள்ளல்.
3. தனிநபர் ஒவ்வொரும் இறைவார்த்தையைக் கேட்பதோடு மட்டும் நிற்காமல் அவற்றைச் செயலில் வெளிப்படுத்துதல்.
4. ஒவ்வொரு தனிநபரும் தத்தமது வயது, ஆற்றல், ஆர்வத்திற்கு ஏற்ப பக்திச் சபைகளில் இணைந்து பணியாற்றுதல்.

### பங்குத்திருச்சபையின் முயற்சிகள்

1. ஒவ்வொரு தனிநபரும் தன்னோடு இருக்க - தனிமையில் இருக்க - தன்னிலை உணர - சுய பரிசோதனை செய்ய ஊக்குவித்தல்.
2. தனிநபர் ஒவ்வொரும் நாளாந்தம் ஆன்ம சோதனை செய்ய அறிவுறுத்துதல்.
3. தனிநபர் வாழ்வு மாற்றம், மற்றும் தனிநபர் புதுப்பித்தலை இலக்காகக்கொண்டு புதுப்பித்தல் தியானங்களை ஒழுங்குபடுத்துதல்.
4. தனியாகச் செபித்தலையும், ஆலயத்திற்குச் சென்று தனியாக நற்கருணைச் சந்திப்பில் ஈடுபடுவதையும் ஊக்குவித்தல்.
5. திருப்பலிக்கு முன் மௌன செபத்தை ஊக்குவித்தல். திருப்பலிக்கு முன்னர் காலைச்செபம் மற்றும் சில குறுகிய நேரத் தியானம் போன்றவற்றை குருக்கள், துறவியர் வழிநடத்தலாம். திருப்பலியில் மனத்துயர் வழிபாட்டை உளப்பூர்வமாகச் செய்தல்.
6. தனிநபர் தனது பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய ஊக்குவித்தல்.
7. தனிநபர் ஒவ்வொருவரும் திருவிவிலியத்தை வைத்திருந்து வாசிக்கத் தூண்டுதல்.
8. ஞாயிறு திருப்பலிக்கு வராதவர்கள், வழிபாடுகளைப் புறக்கணித்து அசமந்தப் போக்கில் உள்ளவர்கள், ஆன்மீக அக்கறையற்றவர்கள் போன்றோரை பங்குத்தந்தை, துறவியர், பங்குப் பணியாளர்கள் சந்தித்து உரையாடுதல். அவர்களை நேர்வழிக்குக்கொண்டுவர தொடர்முயற்சிகளை மேற்கொள்ளல்.
9. தனிநபர் புதுப்பித்தலை மையமாகக்கொண்டு தவக்காலம், திருவருகைக்காலம் போன்ற சிறப்புக்காலங்களில் உச்சப்பயனைப் பெற முயற்சித்தல்.
10. ஆர்வமுள்ள தனிநபர்களுக்கு ஆழ்நிலைத் தியான செப (Contemplative Prayer Life) அனுபவங்களை அறிமுகப்படுத்துதல்.
11. தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்திசெய்ய தனிநபருக்கான ஆற்றுப்படுத்தல்களை ஒழுங்குசெய்தல் (Personal Counseling).
12. தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் மூலம் தனி நபரில் ஏற்படும் பிறழ்வுகளைச் சீர்செய்ய கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல்.

## குடும்பங்களைப் புதுப்பித்தல்

### குடும்ப ஆன்மீகம்

1. தந்தை, தாய், பிள்ளைகள் கூடிவந்து குடும்பச் செபம் செய்ய ஊக்குவித்தல்.
2. குடும்பங்களில் முக்கிய தீர்மானங்கள் எடுப்பதற்குமுன் இறைத்திருவுளத்தை நாடிச் செபித்தல்.
3. குடும்பங்களில் விவிலிய அரங்கேற்றம் செய்தலும், குடும்பமாக இறைவார்த்தையை வாசிக்க ஊக்குவித்தலும்.
4. ஞாயிறு மற்றும் கடன் திருநாட்களில் குடும்ப உறுப்பினர் அனைவரும் திருப்பலிக்குச் செல்வதை ஊக்குவித்தல்.

### குடும்ப உறவு

1. குடும்ப உறவைப் பலப்படுத்தவும், அதிகமதிகமாக புரிந்துணர்வை வளர்க்கவும் அம்மா, அப்பா, பிள்ளைகள் என அனைவரும் குடும்பமாகக் கூடியிருந்து மனந்திறந்து அளவளாவுதலும், குடும்பமாக உணவருந்துதலும்.
2. குடும்பப் பிரச்சினைகளில் பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர் அளவுக்கு அதிகமாக, தேவையற்ற விதத்தில் தலையிடாமல் இருக்க நடவடிக்கை எடுத்தல்.
3. குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும், மரியாதையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளவும் ஊக்குவித்தல்.

### குடும்பத் தரிசிப்பு

1. குடும்பத் தரிசிப்பை கிரமமாக மேற்கொள்ளல்.
2. பங்கில் உள்ள குடும்பங்களின் பிரச்சினைகளை இனம்காணவும், ஆலோசனைகள் வழங்கவும் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள் போன்றோர் குடும்பத் தரிசிப்பை மேற்கொள்ளல்.
3. குடும்பத்தரிசிப்பை மேற்கொள்பவர்களுக்கு குடும்ப ஆணைக்குழு மூலமாக முறையான பயிற்சி அளித்தல்.
4. வறுமை, முதுமை, நோய், மாற்றுத்திறன் போன்றவற்றைக் கொண்ட குடும்பங்களைத் தரிசித்தலும் அவர்களுக்கு உதவுதலும். பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்குக் குடும்பப் பணிக்குழுவினர் போன்றோர் இச்சந்திப்புக்களை மேற்கொள்ளலாம்.

### குடும்பங்களுக்கான மேய்ப்புப் பணி

1. திருச்சபை முறைப்படி திருமணம் செய்யாமல் கூடிவாழும் குடும்பங்களை வழிப்படுத்தி, அவர்கள் திருச்சபை முறைப்படி திருமணத்தை சீர்செய்வதற்கு ஆவன செய்தல்
2. மனத்தாங்கலாக காரணமாக ஆலயத்தைவிட்டு தூர விலகிநிற்கும் குடும்பங்களோடு தொடர்பாடல்களை ஏற்படுத்தி, அக்குடும்பங்களை ஆலயத்திற்கு அழைத்துவர முயற்சி எடுத்தல்.
3. பங்குத்தந்தை தனது மறையுரைகளில் குடும்பப்பிரச்சினைகள் தொடர்பாக அறிவுரை வழங்குதல்.
4. ஒவ்வொரு பங்குகளிலும் இளம் குடும்பங்களுக்கான ஒன்றியத்தினை உருவாக்கல்.

### குடும்பங்களுக்கான சமூகப் பணி

1. இளவயதுத் திருமணங்களைத் தடுக்கத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளல்.
2. குடும்பக் கட்டுப்பாட்டை நீக்கி பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆலோசனை வழங்குதல்.
3. குடிவெறி மற்றும் போதைவஸ்துப் பாவனை போன்றவற்றுக்கு அடிமையானோருக்கு *திருப்புமுனை* போன்ற நிறுவனங்கள் ஊடாக புனர்வாழ்வு அளித்தல். இதன் மூலம் குடும்பங்களில் புதுவாழ்வைக் கொண்டுவருதல்.
4. புதுப்பித்தல் உரைகளை வழங்கி குடும்பமாக அர்ப்பணிக்கச் செய்தல்
5. தேசிய குடும்பத் தியானத்தில் பங்கெடுக்க ஊக்குவித்தல்
6. குடும்பமாக சுற்றுலா செல்வதை ஊக்குவித்தல்.

### குடும்பங்களுக்கான பொருளாதார உதவிகள்

1. வசதியான குடும்பங்கள் வசதி குறைந்த குடும்பங்களுக்கு உதவிசெய்யும் முறையை ஊக்குவித்தல்.
2. குடும்பங்களில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல்.
3. ஒவ்வொரு குடும்பமும் ஆடம்பர வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்து, வருமானத்திற்கு ஏற்ப வாழ வழிகாட்டுதல்.
4. சிறுதொழில் கடன் (Micro Loans) தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் பாதிப்புக்களில் இருந்து குடும்பங்களைப் பாதுகாத்தல்
5. 'வாழ்வுதயம்' போன்ற திருச்சபை அமைப்புக்கள் மூலமாகவோ, அல்லது ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவோ வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.

### குடும்பங்களின் ஒழுக்கவியல்

1. குடும்பங்களின் பெரும் சொத்து பிள்ளைகள். பொருளாதார காரணங்களுக்காக கருத்தடை, கருச்சிதைவு போன்றவற்றைச் செய்யும் குடும்பங்களுக்கு போதிய ஆலோசனைகள் வழங்குதல். இதற்காக தொடர்ந்து செயற்படும் குழுக்களை உருவாக்குதல் (உதாரணம் - கிறிஸ்துவுக்காகத் தம்பதியர்)
2. இயற்கைக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகம் செய்தல்
3. 'மலரும் மண உறவு', 'கிறிஸ்துவுக்காக தம்பதியினர்' போன்ற குழுக்கள் வழியாக குடும்ப வாழ்வில் புதுப்பித்தலைக் கொண்டுவருதல்.

### குடும்பங்களுக்கான ஆற்றுப்படுத்தலும், அறிவூட்டலும்

1. நீண்ட காலமாகப் பிரிந்திருக்கும் குடும்பங்களுக்கு தகுந்த வளவாளர்களைக்கொண்டு ஆற்றுப்படுத்தல்களை **(Counseling)** முன்னெடுத்தல். அக்குடும்பங்களை இணைக்க முயற்சி செய்தல்.
2. குடும்பங்களில் தனிநபர் ஆற்றுப்படுத்தல்களை (Personal Counseling) முன்னெடுத்தல். உதாரணமாக தற்கொலை மனநிலையில் உள்ளோரை உளவியல் ரீதியாக ஆற்றுப்படுத்துதல்
3. திருமணமானவர்களுக்கு ஆண்டு ரீதியாக (5 வருடம், 10 வருடம் என) கருத்தமர்வுகளை நடாத்துதல்.
4. வீதி நாடகங்கள் மூலம் குடும்பப் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
5. குடும்ப உறவைப் பாதிக்கும் தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் மட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்த சுவரொட்டிகள், குறும்படங்கள், வீதி நாடகங்கள், கண்காட்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல்.

### பங்குக் குடும்பப் பணிக்குழுவினால் முன்னெடுக்கப் படக்கூடிய பணிகள்

1. பங்குக் குடும்பப் பணிக்குழு இல்லாத பங்குகளில் அவற்றை ஏற்படுத்துதலும் ஏற்கனவே இயங்கும் குடும்பப் பணிக்குழுக்களை வலுப்படுத்துதலும்.
2. பங்குப் பணிக்குழுக்களின் உதவியோடு பங்கில் திருமண யூபிலி விழாக்களை சிறப்புத் திருப்பலியோடு கொண்டாடுதல்.
3. குடும்பப் பணிக்குழுவின் உதவியோடு ஒவ்வொரு மாதமும், அந்த மாதத்தில் திருமண நாளை நினைவுகூரும் குடும்பங்களை இனம்கண்டு அக்குடும்பங்களை ஞாயிறு திருப்பலியில் நினைவுகூருதல். திருப்பலி முடிவில் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தல்.
4. பங்குக் குடும்பப் பணிக்குழு ஊடாக குடும்பங்களுக்கான வலய மட்ட, பங்கு மட்ட கருத்தரங்குகளை நடாத்துதல்.
5. பங்குக் குடும்பப் பணிக்குழு ஊடாக அன்னையர்தினம், தந்தையர்தினம், முதியோர் தினம், சிறுவர் தினம் போன்றவற்றைப் பங்குகளில், குடும்பங்களில் சிறப்பாக ஒழுங்குசெய்து அனுசரித்தல்.

### குடும்பப்பணி ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப் படக்கூடிய பணிகள் :

1. மறைமாவட்ட குடும்பப் பணி ஆணைக்குழுவினால் நடத்தப்படும் திருமண ஆயத்த வகுப்பு நாட்களை இன்னும் விரிவாக்குதல்.
2. குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சட்டத்தின் உதவியை நாடுவதற்கு முன் குடும்பப் பணி ஆணைக்குழுவின் ஊடாகத் தீர்வைப்பெற முயற்சிசெய்தல்.
3. மறைமாவட்ட குடும்பப் பணி ஆணைக்குழுவில் ஆர்வமாக இயங்கக்கூடிய பங்குப் பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ளல்.

### மறைமாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கக்கூடிய திட்டங்கள்

1. மறைமாவட்ட ரீதியில் குடும்ப ஆற்றுப்படுத்தல் மையத்தை உருவாக்குதல்

## இளைஞர் வாழ்வைப் புதுப்பித்தல்

### இளையோரின் ஆன்மீகம்

1. இளையோரின் வாழ்வு மாற்றத்தை இலக்காகக்கொண்டு புதுப்பித்தல் தியானங்களை ஒழுங்குசெய்தல்.
2. இளையோரைத் தனிப்பட்ட செபத்தில் ஈடுபடத் தூண்டுதல்.
3. இளையோர் தனிப்பட்ட முறையில் இறைவார்த்தையை வாசிக்கத் தூண்டுதல்.

(விவிலிய நாட்காட்டியை (பைபிள் டயறியை) பயன்படுத்த ஊக்குவித்தல்)

4. இளையோர் ஞாயிறு திருப்பலியில் பங்கெடுக்க ஊக்குவித்தல்.
5. இளையோர் தாமாகவே ஒன்றுகூடி இறைவார்த்தைப் பகிர்வை மேற்கொள்ள வழிவகைசெய்தல்.
6. இளையோர் ஒப்புரவு அருட்சாதனத்தைப்பெற ஊக்குவித்தல்.

### இளையோருக்கான மேய்ப்புப் பணி

1. பங்கு ரீதியில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியங்களை உருவாக்கல், சீரமைத்தல். பங்கு மட்டத்தில் இளையோருக்கான சிறப்புத் தியானங்களை ஒழுங்குசெய்தல்.
2. இளைஞர் மரியாயின் சேனை, இளைஞர் வின்சற் டி போல் சபை போன்ற இளையோருக்கான பக்திச்சபைகளை ஏற்படுத்தி அவற்றில் இளைஞர்கள் பங்கெடுக்க வழிவகை செய்தல்.
3. மாணவர்களுக்கான மறைக்கல்வி வகுப்புக்களில் கிறிஸ்தவ நெறிமுறைகளையும், ஒழுக்கவியல் சம்பந்தமான விடயங்களையும் அதிக அக்கறையோடு கற்பித்தலின் வாயிலாக எதிர்கால இளைஞர்களை சிறப்பாக உருவாக்குதல்.

### இளையோரும் பெற்றோரும்

1. பெற்றோர் தம் பிள்ளைகளுடன் நட்புணர்வோடு மனம்விட்டுப் பேசுதல். அவர்களுடன் உணவருந்துதல்.
2. பெற்றோர் தமது அனுபவங்களைப் பகிர்தல், வன்முறையற்ற தொடர்பாடல்களை ஏற்படுத்துதல்.
3. காலத்திற்கு ஏற்ப இளையோரின் சிந்தனையில் ஏற்படும் மாற்றங்களை பெற்றோர் புரிந்துகொண்டு நடத்தல்.
4. இளைஞர் ஒன்றியம் தொடர்பாக சில பெற்றோருக்கு சரியான விளக்கங்கள் இன்மையால் தம் பிள்ளைகளை இளைஞர் ஒன்றியங்களில் இணைத்துக்கொள்ள விரும்புவதில்லை. எனவே பெற்றோருக்கு இது தொடர்பான விளக்கங்களை வழங்குதல்.

### இளையோருக்கான சமூகப் பணி

1. இளையோருக்கான உளவள ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.
2. இளையோருக்கான பாலியல் கல்வி, திருமண வாழ்வு தொடர்பான அறிவூட்டல்.
3. தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றில் மூழ்கிக்கிடக்கும் இளையோரை அதே சாதனங்கள், வலைத்தளங்கள் ஊடாக நல்வழிப்படுத்துதல்.
4. இளையோர் மாவட்ட மட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான உற்சாகத்தை வழங்குதல்.

### இளையோருக்கான பொருளாதார வசதிகள்

1. இளையோருக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கி, அவர்களை திருச்சபைக்குள் உள்ளீர்த்துக்கொள்ளல்.
2. இளையோருக்கான வேலைவாய்ப்புக்கள் பற்றிய தகவல் பரிமாற்றங்கள், நெறிப்படுத்தல்கள் போன்றவற்றைச் செய்தல். வேலைவாய்ப்புத் தொடர்பான கருத்தமர்வுகளை நடத்துதல்.
3. உயர்கல்வி பெறமுடியாத இளையோர்கள் சாரதியம், தையல், கட்டிட வேலை, தச்சுவேலை போன்ற தொழில்களைக் கற்றுக்கொள்ள ஆவன செய்தல். (டொன் பொஸ்கோ குருக்கள், இயேசுசபைக் குருக்கள், டொன் பொஸ்கோ அருட்சகோதரிகள், நல்லாயன் அருட்சகோதரிகள் போன்றோரின் உதவியை நாடலாம்)

### இளையோரும், பங்குத்தந்தையும் (துறவியரும்)

1. பங்குத்தந்தையர், துறவியர் போன்றோர் இளையோர்களோடு நேரடியான சந்திப்புக்களை, (Personal Encounter) தொடர்பாடல்களை, உறவாடல்களை மேற்கொண்டு அவர்களை திருச்சபைக்குள் உள்ளீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
2. குருக்கள் துறவியர் இளைஞர்களுடனான சிநேகபூர்வமான அணுகுமுறையைப் பேணுதல். அவர்களுடைய உள்ளார்ந்த கேள்விகளை பொறுமையோடு பதில் அளிக்க முயற்சித்தல்.
3. குருக்கள், துறவியர், இளையோர் தொடர்பான எதிர்மறை எண்ணங்களை மாற்றி அமைக்க வேண்டும்.

(மறுபக்கம் பார்க்கவும்)

# மன்னார் மறைமாவட்ட அருட்பணித் திட்டமிடல் மாநாடு - 2019

4. இளையோரின் குறைநிறைகளோடு அவர்களை ஏற்றுக்கொள்ளல். இருக்கும் இடத்திற்கு சென்று அவர்களை திருச்சபைக்குள் அழைத்துவர ஆவன செய்ய வேண்டும். உதாரணம் : விளையாட்டுத் திடல்.
5. பங்குமட்ட இளைஞர் ஒன்றியத்தில் இளையோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் கலைநிகழ்ச்சிகள், சுற்றுலாக்கள், விளையாட்டுக்கள் மூலமாக அவர்களை ஈர்த்துக்கொள்ளுதல்.
6. இளைஞர் ஒன்றியங்களுக்கு அப்பால் இளைஞர்களை மையப்படுத்திய பங்கு விளையாட்டுக் கழகங்கள், கலை மன்றங்கள் போன்றவற்றை உருவாக்கி இளைஞர்களை உற்சாகப்படுத்துதல்.
7. பங்கு அருட்பணிப் பேரவையில் இளைஞர்களையும் உள்வாங்குதல்.

### தலைமைத்துவம்

1. இளையோருக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி அவர்கள் அவற்றைச் செயற்படுத்த வாய்ப்புக்களை வழங்கல். அவர்களைக் கண்காணித்தல்.
2. பங்குப் பணிகளில் இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குதல். சில நிகழ்வுகளுக்கான முழுமையான பொறுப்புக்களை இளைஞர்களுக்கு வழங்கி, அவர்களின் தலைமைத்துவத்திற்கு வழிவகுத்தல். உதாரணம் ஒளி விழா, மேதினம், சிரமதானம் போன்றவை.

### மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு

1. மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு, இளையோருக்கான மறைமாவட்ட ரீதியிலான ஒன்றுகூடல்களை ஏற்படுத்துதல்.
2. மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு, பொருத்தமான வளவாளர்களின் துணையுடன் உளவியல், ஆற்றுப்படுத்தல் தொடர்பான கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
3. மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு, மறைமாவட்ட மட்டத்தில் இளைஞர் மாநாடுகளை நடாத்துதல்.
4. மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு, இளையோருக்கான மது, போதைவஸ்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
5. மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு பிற மாவட்ட இளைஞர்களுடன் உறவுப்பால நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல்.

**மறைமாவட்ட மட்ட முயற்சி**

1. எதிர்கால இளைஞர்களை சிறப்பாக உருவாக்கும்பொருட்டு ஒருசில பாடசாலைகளையாவது மறைமாவட்டக் குருக்கள் நிர்வகிக்கக்கூடிய வகையில் மறைமாவட்டம் முயற்சிகளை மேற்கொள்ளல்.
2. இளைஞர் பணி தொடர்பாக - இளைஞர்களைக் கையாள்வது தொடர்பாக - சில குருக்கள் சிறப்புப் பயிற்சிபெற மறைமாவட்டம் வழிவகை செய்தல்.

### அன்பியங்களைப் புதுப்பித்தல்

**அன்பிய வாழ்வு பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவூட்டல் வழங்கல்**

1. அன்பிய வாழ்வு என்றால் என்ன? என்பது தொடர்பாக பங்குகளில் கருத்தரங்குகள், சிறப்புரைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அன்பிய வாழ்வு பற்றிய சரியான புரிதலை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
2. அன்பிய ஒன்றுகூடல்களின்போது அன்பிய வழிபாட்டை நடத்துவதற்கான ஒரு வழிமுறையாகிய ஏழு படிமுறை செபவழிபாட்டை நடைமுறைப்படுத்த ஆவன செய்தல். இதுபற்றிய தெளிவை மீளவும் மக்களுக்கு வழங்குதல்.
3. பங்கு மட்டத்தில் அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான தொடர்ச்சியான ஒன்றுகூடல்களை நடத்தி பங்குகளில் அன்பியங்களின் நிலைமைகளை அறிந்துகொள்ளுதல்.
4. சிறப்பாக இயங்கும் அன்பியங்கள் தமது அனுபவங்களைப் பகிரும்போது ஏனைய அன்பியங்களுக்கு அது முன்னுதாரணமாகவும், ஊக்குவிப்பாகவும் அமையும்.

**அன்பியங்களை மீளுருவாக்கம் செய்தல்**

1. நீண்டகால அன்பியப் பணியாளர்களோடு சேர்த்து புதிய பணியாளர்களையும் உள்வாங்குதல், உருவாக்குதல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
2. அன்பியப் பணியாளர்களின் தெரிவின்போது தகுதியானவர்கள், அர்ப்பண சிந்தை உடையவர்கள், முன்மாதிரிகையான வாழ்வு வாழ்பவர்கள், தலைமைத்துவப் பண்புகொண்டவர்கள் போன்றோர் தெரிவுசெய்யப்படும்போது அது அன்பியங்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.
3. குறிப்பிட்ட அன்பியத்தின் ஊக்குவிப்பாளர்கள் சுழற்சிமுறையில் பொறுப்பேற்றுக்கொள்வதன் மூலம் அன்பியக்குழுமத்தில் உள்ள அனைவருமே தலைமைதாங்கும், ஊக்குவிக்கும் பொறுப்புடையவர்களாக வளர்வதற்குரிய வாய்ப்பாக அமையும்.
4. புதிய அன்பியப் பணியாளர்களைத் தெரிவுசெய்யும்போது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்குதல்.
5. வளர்ந்துவரும் குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அன்பியங்களை மீளுருவாக்கம் செய்தல். அதாவது தேவைக்கேற்ப அன்பியக் குழுமங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
6. அன்பியக் குழும அமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் புதிய அணுகுமுறையைக் கொண்டுவருதல். உதாரணமாக அன்னையர் அன்பியம், தந்தையர் அன்பியம், இளையோர் அன்பியம், மாணவர் அன்பியம் போன்றவற்றை ஏற்படுத்துதல்.
7. ஆண்கள் மற்றும் இளைஞர்கள் வேலைக்குச் செல்வதால் அவர்களும் அன்பிய ஒன்றுகூடல்களில் பங்கேற்கும் வகையில் அன்பிய ஒன்றுகூடல் நேரத்தைக் கவனத்தில் கொள்ளுதல்.

**அன்பியங்களுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு**

1. வசதியான அன்பியங்கள், வசதியற்ற அன்பியங்களுக்கு தம்மாலான உதவிகளை வழங்குதல். ஏழைகள், வறியோர், தேவையில் உள்ளோர் போன்றோரை அன்பியப் பணியாளர் மூலம் இனங்கண்டு அவர்களுக்கு உதவுதல். இதன் மூலம் பகிர்வு என்ற பண்பை அன்பியத்தில் வாழ்வாக்க முயற்சித்தல்.
2. நன்றாக இயங்கும் அன்பியங்கள், மந்தகதியில் இயங்கும் அன்பியங்களுக்கு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், செயற்பாடுகளையும் பகிர்ந்துகொள்வதன் ஊடாக ஊக்கமளித்தல்.
3. அன்பியங்கள் வழிபாட்டில் இருந்து வாழ்வுக்கு கடந்துசெல்ல முயற்சி எடுத்தல். உதாரணமாக அன்பியங்களுக்கிடையே உணவுப் பகிர்வுகள், உறவுப்பாலம், சிரமதானம், போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் போன்ற வெவ்வேறு விடயங்களைச் செயற்படுத்தல்.
4. பங்குகளில் சிறப்பாக இயங்கும் அன்பியங்களின் ஊக்குவிப்பாளர்கள் மறைமாவட்ட ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படல்.

**அன்பியங்கள் மட்டில் பங்குத்தந்தையர், துறவியர் மற்றும் பங்கு மேய்ப்புப்பணிச் சபையினரின் கடமைகள்**

1. ஒரு பங்கில் அன்பியங்கள் உயிர்த்துடிப்புடன் இயங்க பங்குத்தந்தையின் ஆர்வமும், முயற்சியும், தொடர்ச்சியான ஒத்துழைப்பும் மிகவும் இன்றியமையாதது.
2. பங்குத்தந்தையர், துறவியர், பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் ஆகியோர் அன்பியங்கள் மட்டில் ஊக்கத்துடன் செயற்படுதல். அன்பியங்களை அடிக்கடி சந்தித்து உரையாடுதல், ஊக்குவித்தல்.
3. அன்பிய வாழ்வுக்கு தடையாகவுள்ள முக்கிய காரணிகளுள் ஒன்று குடும்பங்களிடைய உள்ள பகையுணர்வு ஆகும். சொத்துப்பிரச்சினை, காணிப்பிரச்சினை போன்ற பிரச்சினைகள். காரணமாக நீண்ட காலமாக பகையுணர்வோடு இருக்கும் குடும்பங்களை பங்குத்தந்தையர், துறவியர் போன்றோர் இனம்கண்டு அவர்களைச் சந்தித்து ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சி எடுத்தல்.
4. உறவுச் சிக்கல்களில் உள்ள குடும்பங்களைச் சந்தித்து பிணக்குகளைத் தீர்க்க உதவுதல். குடும்பநல ஆற்றுப்படுத்தல்களை (Family Counseling) வழங்குதல்.
5. ஆலய நிகழ்வுகளில் அன்பியப் பணியாளர்களையும், அவர்களது பணியையும் அதிகமாக உள்வாங்குதல்.
6. அன்பியக்குழுக்களின் செயலிழப்பிற்குரிய காரணங்களைக் கண்டறிதல், அன்பியக்குழுமங்களைச் சந்தித்து வலுவூட்டுதல்.
7. தவக்காலம், திருவருகைக்காலம் போன்ற காலங்களில் அன்பியத் திருப்பலிகளை அதிகரித்தல்.
8. அன்பிய வாரத்தைச் சிறப்பிக்க ஆவன செய்தல். பங்கில் அன்பியங்களின் எழுச்சிக்கு இந்த வாரத்தை உரிய முறையில் திட்டமிட்டு பயன்படுத்துதல்.
9. அன்பியங்கள் தமது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பங்கு அருட்பணிப் பேரவை வழிகாட்டுதல்.
10. பங்குத்தந்தையர், துறவியர், பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் போன்றோர் அன்பிய ஆணைக்குழுவுடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்துதல். அன்பிய ஆணைக்குழுவின் மூலம் அதிகபட்ச பலனை பங்கில் பெற்றுக்கொள்ள ஆவன செய்தல்.
11. ஒரு பங்குத்தந்தை மாற்றலாகிச் செல்லும்போது புதிய பங்குத்தந்தை ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.
12. அன்பிய ஆணைக்குழு பங்கிற்கு வருகைதந்து அன்பியங்கள் தொடர்பான தனது பணிகளைச் செய்யும்போது பங்குத்தந்தை உட்பட பங்குச்சமூகம் முழுவதும் இவ்வாணைக்குழுவிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல்.

**மறைமாவட்ட ரீதியில் அன்பிய ஆணைக்குழுவின் பணிகள்:**

1. அன்பிய ஆணைக்குழு அடிக்கடி பங்குகளையும், அன்பியங்களையும் சந்தித்து ஊக்குவித்தல்.
2. அன்பிய ஆணைக்குழுவின்கீழ் ஒவ்வொரு பங்கிலும் பங்குத்தந்தை, துறவியர், மேய்ப்புப்பணிச்சபை, பொதுநிலைப் பணியாளர்கள் போன்றோரைக்கொண்ட ஒரு உபகுழுவை ஏற்படுத்துதல்.
3. அன்பிய ஆணைக்குழு அன்பிய வாரத்தைச் சிறப்பிக்க தற்போது எடுத்துவருகின்ற முயற்சிகளை இன்னும் அதிகரித்தல்.
4. அன்பிய ஆணைக்குழு அன்பியப் பணியாளர்களுக்கான தொடர் பயிற்சியின்போது உளவள, ஆற்றுப்படுத்தல் பயிற்சிகளையும் வழங்குதல்.
5. மறைமாவட்டம் முழுவதும் இயலுமானவரை வியாழக்கிழமை அன்பிய தினம் என்ற ரீதியில் ஒருமைத்தன்மையுடன் இயங்குதல்.
6. மறைமாவட்டத்தில் உள்ள அன்பியங்கள் பற்றிய முழுமையான தகவல்களைத் திரட்டி அன்பியங்கள் பற்றிய ஆவணக்காப்பகம் ஒன்றை ஏற்படுத்தல்.
7. அன்பிய மத்திய குழுவை மேலும் ஊக்கமுடன் இயங்கவைப்பதற்கு நிதி, வாகன வசதி போன்ற அத்தியாவசியத் தேவைகளை மறைமாவட்டம் செய்துகொடுத்தல்.
8. அன்பியம் பற்றிய மேலதிக பயிற்சிகளை, உருவாக்கத்தினைப் பெற ஆவன செய்தல் (இந்தியா போன்ற இடங்களுக்கு குருக்கள், துறவியர், பொதுநிலையினரை அனுப்பி பயிற்றுவித்தல்). ●

# குடும்பம், பெற்றோர், பிள்ளை உறவு

- பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா, உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம் -

தொடர் - 4

**கணவன் மனைவி உறவு**

பெற்றோர், சகோதரர்களால் கணவன் மனைவி இருவருக்கிடையில் பிரச்சினை ஏற்படக்கூடும். "எங்கள் ரெண்டு பேருக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவரின்ரை அம்மா சகோதரங்களால்தான் அடிக்கடி பிரச்சினை வரும்" இது ஒரு மனைவியின் கூற்று.

புதிதாகத் திருமணம் முடித்தவர்கள், ஒருவருக்கேற்ப மற்றவரை பக்குவப்படுத்திக்கொள்ள தனிக்குடும்பம் நடத்துவதே சிறந்தது. குடும்ப வாழ்வு என்றால் இப்படித்தான் இருக்கும் என இருவரும் பல சிந்தனைகள், ஆசைகளை வைத்துக்கொண்டே திருமணம் செய்திருப்பர். அதற்கு மாறாக மற்றவர் செயற்படும்பொழுது திருமணம் முடித்த சில நாட்களிலேயே உறவில் தொய்வு ஏற்பட்டு விடும். தமது வீட்டில் உள்ள பழக்க வழக்கங்களுக்கு மாறாக புகுந்த வீட்டில் இருக்கும்பொழுது அதற்கேற்ப தம்மை பழக்கப்படுத்திக் கொள்ள முடியாது இருப்பின் மனதில் கஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆரம்பத்தில் இது தெரிவதில்லை. போகப்போக சிறு பிரச்சினையும் பெரிதாகத் தெரியத் தொடங்கும்.


"எனது மகன் திருமணத்திற்கு முன்பு நான் சொன்னபடி கேட்பான். வேலைக்குப் போகுமுன் எனக்குச் சொல்லிவிட்டே செல்வான். ஆனால் திருமணத்தின் பின்பு மனைவிக்கு மட்டுமே சொல்லிவிட்டு செல்கிறான். மனைவி சொன்னபடியே நடக்கின்றான் எனது மகனை என்னிடமிருந்து வந்த மருமகள் பிரித்துவிட்டாள்." இது மாமியாரின் முறைப்பாடு. மருமகளின் முறைப்பாடு என்ன என்பதைப்



பார்ப்போம். "அவர் என்னைக் கலியாணம் முடிச்சாலும் இன்னும் எனக்கு கணவராகவில்லை. அம்மாவின் மகனாகவே இருக்கின்றார். எனக்கு ஒன்றும் சொல்வதில்லை. அம்மாவும், மகனும் கதைக்கவும் நேரமில்லை. எங்கடை வீட்டில் அப்பா என்னிலை சரியான அன்பு. கலியாணம் முடிச்ச புதுசில அன்பாய் இருந்தவர் இப்ப வேலை வேலை, பணம் பணம் எண்டு ஓடித்திரிகின்றார். இதைவிட அப்பா அம்மாவோடை இருந்திருக்கலாம். ஏன்தான் கலியாணம் முடிச்சேனோ தெரியாது" இப்படித்தான் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. திருமணம் முடித்தபின் புதுத்தம்பதிகள் இருவரும் தமக்குள் உறவை வளர்த்துக்கொள்ள இருபக்க பெற்றோர், சகோதரர்களும் உதவவேண்டும். அதற்குப

பெற்றோருக்கு மனமுதிர்ச்சி தேவை. அதேபோன்று திருமணம் முடித்தவுடன் தாயிடமிருந்து உடனடியாக மகனைப் பிரித்தெடுக்க முயலுவது பிழை. அதேபோன்று பெற்றோரிடமிருந்து மகளைப் பிரித்து என்னுடையதாக்க மனைவி நினைப்பதும் பிழை. அவர்களுக்கும் மன முதிர்ச்சி தேவை. படிப்படியாகவே இதைச் செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பு, பாதுகாப்புணர்வைக் கொடுத்தவாறே இதைச் செய்யவேண்டும். பெற்றோரை விட்டு மற்றவரைத் திருமணம் முடித்து வாழ வருவது ஒருவரின் உதவியுடன் மற்றவர் வளரவே. அதன்பொருள் முற்றாகப் பெற்றோரைக் கைகழுவி விட்டுவிடுவதல்ல. திருமணத்தின் பின்பு பெற்றோரில் தங்கிவாழாது, பெற்றோரின் உதவியின்றி திருமணத்தின்பின் இருவரும் ஒருவர் மற்றவரின் உதவியுடன் வாழப் பழக வேண்டும். எந்த விதத்தில் கணவன் முழுமையடைய வளர நினைக்கின்றார் என்பதை மனைவியுடன் மனம்விட்டுக் கதைத்து மனைவி அதற்கு முன்வரவேண்டும். அதேபோன்று மனைவியும் வளர கணவன் உதவ வேண்டும். மனைவி எப்போதும் அன்பு பாராட்டுதல், மதிப்பு, பாதுகாப்புணர்வைக் கணவனிடம் எதிர்பார்ப்பாள். அவளுக்கு இவற்றைக் கொடுக்காது கணவன் தனது பெற்றோர், சகோதரர்களுக்கு அல்லது காரியாலயத்தில் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அவளுக்கு சந்தேகம், கோபம், வெறுப்புணர்வு கணவரிலும் மற்றவர்களிலும் ஏற்படத் தொடங்கும். உடலில் நோய் ஏற்பட்டவுடன் நாம் வைத்தியரை நாடி ஓடுகின்றோம். ஆனால் பிரச்சினை ஏற்பட்டால் நன்றாகப் பயிற்றப்பட்ட உளநல ஆலோசகரிடம் செல்வதில்லை. பயிற்றப்படாத நபர்களிடம் சொல்வதால் பிரச்சினை கூடுகின்றது. அதேபோன்று இருவரும் சேர்ந்து செபித்து மனம்விட்டு ஒவ்வொருநாளும் கதைக்கவேண்டும். ஒருவர் மற்றவரை மன்னித்து மறக்கப் பழக வேண்டும். ●

(அடுத்த இதழில் தொடரும்)



# மாணவர் மன்னா



## [லூக்கா நற்செய்தி]
## விவிலிய வினாவிடைப்போட்டி - 05
## போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 31.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி விவிலிய மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே 'நற்செய்தியாளர் விருது' பெறும் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி - 05", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.●

### புனித லூக்கா: 01-10 வரை
## விவிலிய வினாக்கள்

01. செக்கரியா என்ற குரு எந்த வகுப்பைச் சேர்ந்தவர்?
02. குழந்தை இயேசுவுக்கு எத்தனையாம் நாள் வந்த போது விருத்த சேதனம் செய்யவேண்டி இருந்தது?
03. திருமுழுக்கு யோவான் தம்மிடம் திருமுழுக்குப் பெற வந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து முதலில் பேசிய வார்த்தை என்ன?
04. இயேசு பெருமான் வளர்ந்த ஊர் எது?
05. இயேசு முடக்குவாதமுற்றவரைப் பார்த்து முதலில் கூறிய வார்த்தைகள் எவை?
06. சீமோன் இராயப்பரின் சகோதரர் பெயரென்ன?
07. இயேசு எந்த தரப்பினர் வீட்டிலே போய் பந்தியில் அமர்ந்தார் என்று சொல்லப்படுகின்றது?
08. கெரசேனர் பகுதியில் அநேக பேய்கள் பிடித்து இருந்த மனிதரின் பெயரென்ன?
09. இயேசு மலைமீது இறைவனிடம் வேண்டுவதற்காக அழைத்துச் சென்ற சீடர்கள் எத்தனை பேர்?
10. இயேசுவால் நல்ல பங்கை தேர்ந்து கொண்டாள் என்று பாராட்டப்படும் சகோதரி யார்?

**குறிப்பு:**
*விவிலிய வினாவிடைப்போட்டி 04 இற்கான முடிவுகள் 2019 தை மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

## உன் பணி சிறக்க உன்னை வாழ்த்துகின்றேன்.

**- J. வதனா வாழ்க்கைப்பெற்றான் கண்டல் -**

மாதத்தில் ஒருமுறை மலரும் மலர் - நீ!
உன்னை ரசிப்போரும் பலர் - உன்னை
சுவைப்போரும் பலர்.
அன்று மக்களுக்காக
மன்னா பொழியப்பட்டது.

இன்று மன்னாரில் கிறிஸ்தவர்களுக்காக பொழிகின்றது
மன்னா. புது பொலிவுடன், பல்வேறு அம்சங்களுடன்,
பல்வேறு விதமான நகைச்சுவைகளுடன்.

விவிலியத்தை வாசிப்பதற்கு குறுக்கெழுத்துப்போட்டி.
மக்களை ஊக்குவிப்பதற்கு
கவிதைக்களம். நோயைக் குணப்படுத்த
மருத்துவக் குறிப்புக்கள். பல்வேறு அம்சங்களைத் தரும்
மன்னா உனது பணி மன்னாரில் தொடர வாழ்த்துகின்றேன்.
வாழ்க, உன்பணி.
தொடரட்டும் மன்னாவின் சேவை.●



# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்களின் சமய மரபுகள்

**அருட்தந்தை யா.றமேஸ் அ.ம.தி**

இஸ்ராயேல் மக்களின் ஆன்மீக, சமூக, அரசியல், பொருளாதார வாழ்வு அனைத்தும் கடவுளை மையப்படுத்தியதாகவே அமைந்தன. குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோப்பு ஆகியோருக்கு கிடைத்த இறைவெளிப்பாட்டின் மூலமும், சீனாய் உடன்படிக்கை அடிப்படையிலும் வளர்ந்த இஸ்ராயேலரின் இறைநம்பிக்கை ஓர் இறைக்கொள்கையாக அமைந்தது. இறைவனைப் பல பெயர்களில் அழைத்து வழிபட்டனர். "ஏல்" என்பது கடவுளுக்கு வழங்கப்பட்ட பொதுப்பெயராகும். இறைவனை பல நாமங்களில் அழைத்து தங்கள் வேண்டுதல்களையும், நேர்ச்சைகள், காணிக்கைகள். பலிகள் அனைத்தையும் நிறைவேற்றி வந்தனர்.

பலி செலுத்துதலே யூதர்களின் வழிபாட்டில் முதன்மை பெற்றதாகும். இவை எருசலேம் ஆலயத்தில் நாளாந்தம் நிறைவேற்றப்பட்டன. எரிபலி மேலே எழும்புதல் எனும் பொருளில் செலுத்தப்படும். இப்பலியில் பலிப்பெருள் (பறவை, விலங்கு) ஆண் இனமாக இருத்தல் வேண்டும். நல்லுறவுப் பலியில் விலங்குகள் மட்டுமே பலியிடப்படும். அத்தோடு புளியாத அப்பமும் காணிக்கையாக செலுத்தப்படும்.

பலிப்பொருள் மூன்று பகுதிகளாக்கப்பட்டு இறைவனுக்கும், குருவுக்கும், பலியிடுபவருக்கும் பிரித்துக்கொடுக்கப்படும். பழிநீக்கும் பலி மூலம் மனிதர்கள் புனிதம் அடைகின்றனர் என்பது யூதர்களின் நம்பிக்கையாகும். அத்தோடு இவை மனிதர் கடவுளுக்கு அளிக்கும் உடன்பாடு, மண்ணும் மக்களும் இறைவனுக்கே சொந்தம், இறைவனுடன் மனிதர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு என்றும் நம்பினர். இயேசுவின் காலத்திலும் நிறைவேற்றப்பட்டு வந்த இப்பலிகள் அதை நிறைவேற்றுபவருக்கு ஏற்ப அமைந்திருந்தது. தானியம், இரசம், தூபம் போன்ற பொருட்களும் பலியாக்கப்பட்டன.

### யூதர்களின் சமய மரபுகள்

செபம் இஸ்ராயேலரின் சமயவழிபாட்டில் மிக முக்கிய இடத்தை வகித்தது. பலியிடுவதையும் அவர்கள் செபமாகவே கருதினர். யூதர்களின் அன்றாடச் செபம் "ஷேமா" (கடவுளுக்கு செவிகொடு) என்று அழைக்கப்பட்டது. யூதர்கள் பொதுவாக காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் கோயிலில் அல்லது செபக் கூடங்களில் செபித்து வந்தனர்.

"ஹெமோயே எஸ்ரே" என்ற 18 புகழுரைச் செபங்களையும் செபித்தனர். இவர்கள் செபம் செய்யும்போது தெபிலின் என்னும் மறைவாசகங்கள் அடங்கிய தோல் பேழையை அணிந்து, தாலித் என்னும் சால்வையால் போர்த்திக்கொண்டு எருசலேமை நோக்கி செபிப்பது வழக்கம். நோன்பிருத்தலும் யூத சமய முறைகளில் ஓர் சிறப்பான பண்பாகும். பாவப்பரிகாரப் பலிவிழாவின்போது ஒவ்வொரு யூதனும் உண்ணாநோன்பிருப்பது வழக்கம். அத்தோடு தமது தேவைகளுக்கு நேர்ச்சை செய்தும் நோன்பிருப்பர். நோன்பின்போது சாக்குடை அணிந்து தலைக்கு எண்ணெயும், உடலில் சாம்பலும் பூசியிருப்பர்.

சிலர் வாரத்தில் ஒருநாள் உணவை ஒறுத்து நோன்பிருப்பர். இயேசு நாற்பது நாட்கள் நோன்பிருந்து தந்தையை நோக்கிச் செபித்தார் என்று நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. அதேபோல் தருமம் செய்வதும் யூதர்கள் மத்தியில் தலைசிறந்த பண்பாகக் காணப்பட்டது. பணக்காரர்கள் தம் வருமானத்தில் ஒரு சிறுபகுதியை தருமமாகக் கொடுத்தனர். யூதப் பெரியவர்களில் பலர் தாம் செய்யும் தருமத்தைப் பலரும் காணுமாறு பெயருக்காக செய்துவந்தனர். ஏழைகளும் தமது வருமானத்தில் இருந்து தருமம் செய்தனர். இயேசு தருமம் செய்யும் முறையை எடுத்துரைப்பதை நற்செய்தியில் காணலாம்.

### சடங்கு சுத்திகரிப்பும், ஓய்வு நாள் அனுசரிப்பும்.

இவை பிறப்பு, இறப்பு, மற்றும் நோய்கள் ஏற்படும்போது பரிகாரமாக நடத்தப்பட்டன. குழந்தை பிறந்த 8ஆம் நாள் அல்லது 40 நாட்களுள் விருத்தசேதனச் சடங்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்பது சட்டமாகும். இதற்காக காட்டுப்புறாக்களை அல்லது மாடப்புறாக்களை காணிக்கையாக செலுத்துவர். இறந்தோரின் உடலைக் குளிப்பாட்டி, பரிமளதைலத்தால் பூசி புதைப்பார்கள். நோயினால் பீடிக்கப்பட்டு இருப்பவனை ஊருக்கு வெளியே இருக்குமாறு அப்புறப்படுத்துவர். குணம் பெற்றபின் தலைமைக்குருக்களிடம் காட்டி, அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டும். பொருத்தனையாக தமது தலைமுடியை அழித்துக் கொள்வார்கள். ஓய்வுநாள் அனுசரிப்பு யூதர்கள் மத்தியில் மிக முக்கியமானதாகும். எனவே கடவுளுக்காக ஒருநாளை ஒதுக்கி "சபாத்" என்று அனுசரித்துவந்தனர். ஓய்வுநாளை உடன்படிக்கையின் சின்னமாக எண்ணி மிகக் கவனமாக அனுசரித்துவந்தனர். ஓய்வுநாள் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகும். அப்போது எக்காளம் ஒலிக்கப்படும். ஓய்வுநாளில் சமையல் உட்பட 39 வகையான வேலைகள் தடைசெய்யப்பட்டு இருந்தன. இயேசு தனது பகிரங்கப் பணிவாழ்வில் ஓய்வுநாளில் மனதாபிமான பணிகளைச் செய்வதன் மகத்துவத்தை எடுத்து விளக்கினார்.

### யூதர்களின் விழாக்கள்

**பாஸ்காத் திருவிழா**: கடத்தல் விழா என்றும், புளியாத அப்பவிழா என்றும் அழைக்கப்பட்ட இப்பாஸ்காவிழாவே யூதர்களின் திருவிழாக்களில் முதன்மையானதாகும். இது விடுதலைப் பயணத்திற்கு முன்னர் வழக்கத்தில் இருந்தாலும் அதற்குப் பின்னரே தனித்துவமும், முக்கியத்துவமும் பெற்றது. எகிப்திய அடிமைத்தன விடுதலையையும், தமது மூதாதையருக்குக் கிடைத்த இறைவனின் பராமரிப்பையும் நினைவுகூர்ந்து கொண்டாடிவந்தனர். இது நிசான் மாதத்தின் 14ஆம் நாள் பாஸ்கா உணவு உண்ணும் நிகழ்வுடன் ஆரம்பமாகும். அத்தோடு எருசலேம் நகர எல்லைக்கு வெளியே கொண்டாடுவது வழக்கமாகும்.

**பெந்தக்கோஸ்தே திருவிழா:**
வாரங்களின் விழா, ஐம்பதாம் நாள் விழா, முதற்கனி விழா என அழைக்கப்படும் இவ்விழா யூத விழாக்களில் பாஸ்காவிழாவுக்கு அடுத்த சிறப்புப் பெற்ற விழாவாகும். பாஸ்கா விழாவின் பின் ஏழு வாரங்கள் முடிந்த மறுநாள் (50ஆம் நாள்) கொண்டாடப்படும் இவ்விழா, யூதர்கள் விளைநிலங்களின் பயனையும், மந்தைகளின் தலையீற்றையும் காணிக்கையாக்கி பலிசெலுத்தும் நன்றிவிழாவாக அமைந்தது.


**கூடாரத் திருவிழா:**
இதுவே யூதர்களின் விழாக்களில் மிகப் பழமையான விழாவாகும். இது எபிரேய மொழியில் 'சுக்கோத்' என்று அழைக்கப்படும். ஆரம்ப காலங்களில் மந்தை மேய்த்தலின் போது கூடாரம் அமைத்து தங்கியதையும், பின்னர் அறுவடைக்காக கூடாரம் அமைத்து இருந்ததையும் நினைவுகூர்ந்து இவ்விழா கொண்டாடப்பட்டது. இது திஸ்ரி (புரட்டாதி-ஐப்பசி) மாதத்தின் 15ஆம் நாளின் பின் எட்டு நாட்கள் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டது.

**புளியாத அப்பத் திருவிழா:**
எபிரேய மொழியில் 'மசாத்' (புளியாத) என்று அழைக்கப்படும் இத்திருவிழா அறுவடையுடன் தொடர்புடையதாகும். பாஸ்கா விழாவின் பின் வரும் ஏழு நாட்களின் முடிவில் இவ்விழா கொண்டாடப்பட்டது. தங்கள் விளைநிலங்களில் முதல் ஏழு நாட்களில் அறுவடைசெய்த கோதுமை மாவில் புளியாத உரொட்டி செய்து காணிக்கைப் பலியாக்குவதுடன், தாமும் உண்பர். அத்தோடு ஆடு, மாடுகளின் தலையீற்றுக்களையும் கடவுளுக்கு காணிக்கையாக்குவர். நிசான் மாதத்திலே பாஸ்காவிழாவும், புளியாத அப்பத்திருவிழாவும் கொண்டாடப்பட்டதால் பிற்பட்டகாலத்தில் இரண்டும் ஒன்றாகக் கொண்டாடப்பட்டன.

**பாவக்கழுவாய்ப் பலி விழா:**
'யோம் கிப்பூர்'என்று அழைக்கப்படும் இவ்விழா திஸ்ரி (புரட்டாதி-ஐப்பசி) மாதத்தின் பத்தாம் நாளில் கொண்டாடப்பட்டது. அந்நாளில் குருக்களும், மக்களும் ஓய்வுநாள் முறைகளை அனுசரித்து, உண்ணாநோன்பிருந்து பரிகாரப்பலிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது நியதியாகும். இவ்விழாவின்போது மட்டுமே தலைமைக்குரு அதிதூயகத்துக்குள் சென்று, அங்குள்ள கல்மேடையில் இரத்தம் பூசிபலிநிறைவேற்றுவதோடு மீதி இரத்தம் மக்கள் மீதும் தெளிக்கப்படும். பாவங்களுக்குப் பலிப்பொருளாகும் ஆட்டில் ஒன்று பாலைநிலத்திற்கு விரட்டிவிடப்படும். இதனை 'போக்கு ஆடு' என அழைப்பர்.

**ஆலய அர்ப்பண விழா:**
இது எபிரேய மொழியில் 'ஹனுக்கா' என்று அழைக்கப்படுகின்றது. புதுப்பித்தல் அல்லது தொடங்குதல் என்பது பொருளாகும். கிரேக்க மன்னனான அந்தியோகு எபிப்பானுஸ் கி.மு 175 இல் எருசலேம் ஆலயத்தை தீட்டுப்படுத்தினான். யூதாமக்கபேயு ஆலயத்தை தூய்மைப்படுத்த மேற்கொண்ட முயற்சி கி.மு 164இல் முழுமைபெற்று, கிஸ்லு (டிசம்பர்-25) மாதத்தில் மீண்டும் ஆலயம் அர்ப்பணம் செய்யப்பட்டு பலிகளும், விழாக்களும் நிறைவேற்றபட்டன. இதனை நினைவுகூரும் விழாவே இதுவாகும்.●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

- அ. ஜஸ்மின் ஷறோணின் கவிதைகள் -

## புன்னகை போதும்…!

எங்கே? எப்போது? எப்படி?
இறைவன் வருவான் அழைக்க.
இது தானே தெரியவில்லை. எனவே
எள்ளளவு பயனற்ற சொற்களையும் இறைக்க வேண்டாம்.
வேதனை விதைகளை விதைக்க வேண்டாம்.
மழைத்துளி போல மகிழ்ச்சியின் சாரலை
மண்ணுலகில் தவழ விடுங்கள்.
நண்பனோ, பகைவனோ புன்னகை எனும் மின்னாற்றலை
அவன்முகத்தில் மின்னும்படியாக பாய்ச்சுங்கள்.
புண்பட்டு கிழிந்த இதயத்தை
புன்னகை நூலால் மென்மையாய் தைத்து விடுங்கள்.
பகை இரும்பையும் பொன்னாக்கும்
ரசவாதம் புன்னகைதானே…! ●

## நிம்மதி என்றால் சம்மதம்…!

அமைதியாய் இருங்களேன்.
ஆண்டவன் பேசுவதை ஆவலாய் - கேட்டு விடுங்களேன்.
அவருக்கு என்மேல் அக்கறை உண்டு.
அடியவளின் வேண்டுதலை அன்புடன் கேட்டார்.
நோய்களும், நோவுகளும் நீங்கி விட்டன!

நினைக்கவும் முடியாத இன்பம் நிறைந்திருக்கிறது நெஞ்சில்.
வாழ்வில் மகிழ்ச்சி… சாவில் மகிழ்ச்சி…
வீட்டில் மகிழ்ச்சி… விழிகளில் மகிழ்ச்சி…
கடவுள் அழைத்தால் கலங்காமல் செல்வேன்.
கனிவும், அருளும் காட்டியவர் தானே அவர்.
நிம்மதி மட்டும் நிலைத்தால் போதும்.
சம்மதம் எந்த நாட்டுக்கும் செல்ல….. ●

## கிறிஸ்து பிறப்பு

வார்த்தை மனுவுருவானார்.
நம்மிடையே குடி கொண்டார்.
தேவபாலன் - இயேசு
பாலனாக பாரினிலே பிறந்தார்.
அப்பத்தின் வீடாம் பெத்லகேமில் அவதரித்தார்.
அவரே அப்ப - இரச வடிவில் எமக்கு ஆன்ம
உணவானார்.
வழியாக - ஒளியாக
வாழ்வாக - வார்த்தையாக வந்தார்.
வாழ்வு தர வந்தார்.
ஞானமே உருவானவர் ஞான ஒளியாக வந்தார்.
அந்த ஞான ஒளியை ஞானிகள் தேடினர்.
ஒளியைக்காண வழி காட்டியது விண்மீன்.
அருட்பொழிவுடன் அவனியில் அவதரித்த ஆண்டவரை
அகம் மகிழ்ந்து, அகிலம் எங்கும் அறிவிப்போம். ●

*பென்ஜமின் சோமநாதர், தெஹிவளை.*

## பாலன் பிறந்தார்



மார்கழி மாதத்தில் மரியின் மடியில்
மன்னவன் இயேசு பிறந்தார்.

பாவங்களை போக்கிடவும்,
நோய்பிணி அகற்றிடவும்
மன்னவர் இயேசு பிறந்தார்.

வைக்கோலின் பஞ்சணையில்
ஏழ்மையின் வடிவினில் சூசை மரிக்கு
மாட்டுத்தொழுவில் பிறந்தார்.

குற்றங்களை அகற்றிடவும், குறைகளை நீக்கிடவும்
பாலன் பிறந்தார்.

கண் அயரும் வேளையில்
கருமணிகள் தோன்றிட
காரிருளில் பாலன் பிறந்தார். ●

*J. வதனா, வாழ்க்கைப்பெற்றான்கண்டல், அளவக்கை*

# கொஞ்சம் சிரிங்க

**ராமு :** எழுத்தாளருக்கும், டாக்டருக்கும் என்ன வித்தியாசம்?
**சோமு :** எழுத்தாளர் கதையை எழுதுவார். டாக்டர் கதையை முடிப்பார்.

* * * * *

**மகன் :** அப்பா இந்த சங்குசக்கரம் பத்திக்கவே மாட்டேங்குது?
**அப்பா:** டேய் மெதுவா பேசுடா.. அது சங்கு சக்கரம் இல்லை.. உங்கம்மா செஞ்ச முறுக்கு

* * * * *


**நோயாளி :** கண்ணை மூடினாலே ஆப்ரேசன் ஞாபகம் வந்து தூக்கத்தைக் கெடுக்குது டாக்டர்.
**டாக்டர் :** கவலைப்படாதீங்க, ஆப்ரேசன் முடிந்ததும் நிம்மதியா கண்ணை மூடிக்கலாம்.

* * * * *

**நோயாளி 1 :** எப்படி சார், மாடியிலிருந்து விழுந்தீங்க?
**நோயாளி 2 :** நானாவா விழுந்தேன்… என் மனைவி என்னைத் தூக்கியெறிஞ்சு போட்டா!

* * * * *

**ஆசிரியர் :** பொறுத்தார் பூமி ஆள்வார் ….. மிகுதியை சொல்லுங்கள் மாணவர்களே!
**மாணவர்கள் :** பொங்கினார் புக்கை சாப்பிடுவார் டீச்சர்.



**கமல் :** அடுத்த பிறப்பில் என்னவாகப் பிறக்க வேண்டும் என ஆசைப்படுகின்றாய்?
**விமல் :** எருமை மாடாக! அப்பதான் என் மனைவி என்னைப் பார்த்துப் பயப்படுவாள்.

* * * * *

**மன்னர் :** நிலவரத்தை நேரில் கண்காணிக்க நான் இலங்கைக்குப் போகிறேன்.
**அமைச்சர் :** பார்த்து மன்னா, ஒருசில இடங்களில் வெள்ளை வேன்ல வந்து கடத்துறாங்களாம்!

* * * * *

**நோயாளி :** டாக்டர், எனக்கு நகம் கடிக்கிற பழக்கம் இருக்கு.
**டாக்டர் :** சாதாரணமா எல்லோருக்கும் இருக்கிற பழக்கம்தானே இது?
**நோயாளி :** இல்ல டாக்டர், நான் கடிக்கிறது அடுத்தவங்கட கால் நகத்தை.

* * * * *

சுரேஸ்: காதல் தோல்வியை விட அதிகமான வலி எது தெரியுமா?
ரமேஸ்: முறுக்கு தின்னும் போது "நறுக்" என்னு நாக்க கடிச்சுக்கிட்டா வருமே அதுதான்!!!

# மன்னா விளம்பரப் பலகை

பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்,
என்று ஆசைப்படுகிறாயோ, நீயும் அப்படியே நடந்துகொள்.

"உண்மையை விலைகொடுத்து வாங்குங்கள், ஆனால் ஒருபோதும் விற்றுவிடாதீர்கள்."
…………………………
"பணத்திற்கு தலை வணங்கும் மனிதன் உண்மையான மகிழ்ச்சியை தூரத்தில் இருந்து பார்க்கவும் முடியாது."
…………………………
"எப்பொழுதும், எல்லோரும் உன்னருகில் இருக்க வேண்டும் என்று எண்ணாதே உன்னைப் போல் எதிர்பார்ப்பவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர்."

"ஆழ்கடலின் அலைகளை அடக்கிட முடியாது என்றால் உன் ஆழ்மனத்தில் நீ கொண்ட கொள்கையை அழித்திட முடியுமா? நீ ஜெயித்திடும் வரையில்."
…………………………
"முதலில் தோல்வியும் பிறகு வெற்றியும் பெறுபவன் தலைக்கனம் கொள்ள மாட்டான்."
…………………………
"சுயநலம் என்பது குடிசை. பொதுநலம் என்பதே அரண்மனை."

"வெற்றிகளைத் தீர்மானிப்பவை இமயங்கள் அல்ல. உன் உள்ளத்தில் கொண்டிருக்கும் உயர்ந்த, உன்னதமான இலட்சியங்களே."

உன்னைவிட உனது பிரச்சினைகளைப் பற்றி உன்னை படைத்தவனுக்கு நன்றாகத் தெரியும்.. அவன் மீது முழு நம்பிக்கை வை. அவன் உன்னைக் காப்பான்..

# மருத்துவக் குணங்கள் நிறைந்த மாதுளம் பழம்



- சூட்டின் காரணமாக மூக்கில் குருதி வடியும் பிரச்சினை இருப்பவர்களுக்கு அறுகம்புல் சாறு இரு தேக்கரண்டி, மாதுளைப்பூச் சாறு இரு தேக்கரண்டி கலந்து தினமும் மூன்று வேளை கொடுத்துவர முற்றிலும் குணமடையும்.
- மாதுளையில் உள்ள 'எல்லஜிக் அமிலம்' (Ellagic Acid) சூரிய வெப்பத்தால் தோல்களில் ஏற்படும் கருமையையும், தோல் புற்றுநோயையும் தடுக்கும்.
- மாதுளம்பழச்சாறு தலைமுடியின் வேர்களை உறுதிப்படுத்தும். தலையில் இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, முடிவளர்ச்சியைத் தூண்டும். இதில் இருக்கும் வைட்டமின் மற்றும் தனிமங்கள் முடியைப் பளபளப்பாகவும், அடர்த்தியாகவும் மாற்றுகின்றன.
- மாதுளம்பழத்திற்கு மலத்தை இளக்கும் சக்தி உண்டு. மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் மாதுளம்பழத்தை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கலிலிருந்து குணம் பெறலாம்.
- திருமணமான பெண்களுக்கு கருவுறுதலில் பிரச்சினை இருந்தால், தினமும் காலையில் வெறும் வயிற்றில் மாதுளம்பழம் சாப்பிட்டுவரலாம். ஹார்மோன் குறைபாடுகள் நீங்கி, கர்ப்பப்பை ஆரோக்கியமாக இருக்கும்.
- மாதவிடாய் தடைப்பட்டபின் உள்ள காலங்களில் (மெனோபாஸ்) ஈஸ்ட்ரோஜெனின் உற்பத்தி குறைந்து, மூட்டுவலி மற்றும் எலும்புத் தேய்மானம் அதிகரிக்கும். இது போன்ற காலங்களில் பெண்கள் தினமும் மாதுளம்பழ ஜூஸ் குடிக்கலாம். அது உடலில் ஈஸ்ட்ரோஜென் உற்பத்தியைத் தூண்டும், எலும்புகள் வலுப்பெற உதவும்.
- மாதுளம்பழச்சாறு பெண்களின் கருவளர் காலத்தில் ஏற்படும் மசக்கை மற்றும் வாந்தியை குணப்படுத்தும். உடல் சூட்டினைத் தணித்து கருப்பைக்கு வலுவூட்டி, இரத்த விருத்தி செய்து கருவை நலமுடன் வளர்க்கும். ஐந்தாவது மாதம்வரை மாதுளையைச் சாப்பிடலாம்.
- மாதுளையின் விதைக்குச் காச ரோகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும், சுக்கிலத்தைப் பெருக்கும் சக்தியும், நீர்சுருக்கும் நோய்களைக் குணமாக்கும் தன்மையும் உண்டு. ●

# கிறிஸ்மஸ் ஸ்பெஷல் குக்கர் கேக்

**தேவையான பொருட்கள் :**



மைதா - 1½ கப்
சூரியகாந்தி எண்ணெய் - ½ கப்
அப்பச்சோடா – ½ ஸ்பூன்
பேகிங் பவுடர் - ½ ஸ்பூன்
வெண்ணிலா எசன்ஸ் - 1 ஸ்பூன்
பால் - 1 கப்
பொடித்த சர்க்கரை - 1 கப்
மஞ்சள் கலர் - 1 சிட்டிகை (விருப்பப்பட்டால்)
முந்திரி - தேவைக்கு
திராட்டை - தேவைக்கு
பாதாம் - தேவைக்கு
பிஸ்தா - தேவைக்கு



**செய்முறை :**

முந்திரி, பாதாம், பிஸ்தாவை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தில் மைதா, அப்பச்சோடா, பேகிங் பவுடர், பொடித்த சர்க்கரை அனைத்தையும் சேர்த்து நன்றாக அரித்துக் கொள்ளவும். அரித்த மாவில் எண்ணெய், வெண்ணிலா எசென்ஸ், மஞ்சள்களர் சேர்த்து நன்றாகக் கலக்கவும். பின் அதில் பாலை சேர்த்து கட்டியில்லாமல் இட்லி மாவு பதத்திற்கு நன்றாக கலந்து கொள்ளவும். மாவு கட்டியாக இருந்தால் சிறிது பால் சேர்த்துக் கொள்ளலாம். குக்கரில் ஆற்று மணலை கால் பாகம் அளவு கொட்டி அடுப்பில் வைத்து சூடாக்கவும். (கண்டிப்பாக மணல் தான் போட வேண்டும்) பின்னர் கேக் செய்யும் அதாவது கனமான அலுமினிய பாத்திரத்தில் ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி அது எல்லா இடங்களிலும் பரவும்படி தடவவும். அதன் மேலே கொஞ்சம் மைதா மாவை தூவவும். இப்படி செய்தால் கேக் ஒட்டாமல் வரும். இப்போது கேக் கலவையை அந்த பாத்திரத்தில் பாதியளவு வரும்படி ஊற்றி அதன் மேலே திராட்சை, முந்திரி, பாதாம், பிஸ்தாவை தூவி விடவும். எப்பொழுதும் கேக் பாத்திரத்தின் பாதி அளவு தான் ஊற்ற வேண்டும், அப்போது தான் கேக் வெந்தவுடன் மேலே எழும்பி வரும்.

இப்போது குக்கரில் இந்த கேக் பாத்திரத்தை வைத்து மூடவும். விசில் போட கூடாது. குக்கர் மூடியில் உள்ள கேஸ்கட் வளையத்தைப் போட வேண்டாம். மிதமான தீயில் 30 நிமிடம் வைத்த பின் குக்கரை நிறுத்தி விடவும். 10 நிமிடம் கழித்து எடுத்து சூடாகப் பரிமாறவும். சூப்பரான குக்கர் கேக் ரெடி. விருப்பப்பட்டால் மேலே கிறீம் தடவி பரிமாறலாம். ●

# மன்னாவின் விவிலியப் போட்டிகள்

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.197

**2 குறிப்பேடு (அதிகாரம் 13 முதல் 24 முடிய)**

உங்கள் விடைகளை ஜனவரி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ★ | | | | | | 02 |
| | ★ | 03 | | | | 04 | | | | |
| | 05 | | | | | | | | | 06 |
| | 07 | | | | | | | | 08 | |
| | | | | | 09 | | | | | |
| | 10 | | | 11 | | | | | ★ | |
| | | | | | | 12 | | 13 | | |
| | | | 14 | | ★ | | | | | |
| | 15 | | | | | | 16 | | | |
| | | 17 | | | | 18 | ★ | | 19 | |
| 20 | | | | ★ | 21 | | | | | 22 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. ஆதலால் ஆண்டவர் அவரது.................. நிலைநிறுத்தினார்.
3. நான் மாறுவேடத்தில் போருக்குச் ................. (குழம்பியுள்ளது)
5. மேலும் யூதாவின் ............... சூழ் நகர்கள் அனைத்திலும் நீதிபதிகளை அவர் நியமித்தார்.
4. அத்தலியா .................. இரையாகி மாண்டபின் நகரில் அமைதி நிலவிற்று.
7. அவன் தீய வழியில் நடப்பதற்கு அவன் தாயின் கெடு ............... காரணம்.
9. நீரே வலிமையும் ............... வாய்ந்தவர்.
11. எனவே ஆண்டவர் உன் குடிமக்களையும், உன் புதல்வரையும், மனைவியரையும், உன் ................ அனைத்தையும் பெரும் கொள்ளை நோயால் வாதிப்பார்.
20. திருக்கோவிலினுள் ................ மற்ற எவனும் கொல்லப்படுவான்.

### மேலிருந்து கீழ்

1. இவர்கள் ................ திருச்சட்ட நூலுடன் சென்று யூதாவில் போதித்தனர்.
2. ஆகவே அவர்கள் .................. குடியேறி உமது திருப்பெயர் விளங்குமாறு இத்திருத்தலத்தை எழுப்பினார்கள்.
4. தன் சகோதரர் எல்லாரையும் இஸ்ரயேலின் தலைவர்களில் சிலரையும் தனது ............ இரையாக்கினான். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
10. உங்களுக்கு எதிராகப் போரிட அவருடைய குருக்களே எக்காளங்களை ஊதிப் ............ எழுப்புவார்கள்.
11. அவர் ............... உறுதியடைந்து யூதாவிலிருந்து தொழுகை மேடுகளையும், அசேராக் கம்பங்களையும் அகற்றினார்.
12. அவன் காலத்தில் நாடு பத்தாண்டு காலம் ............ பெற்றிருந்தது.
13. யூதாவில் கோட்டைகளையும், ................ நகர்களையும் கட்டினார்.
14. அந்நாளில் எவரும் அமைதியாகப் போகவோ, .......... இயலவில்லை.
15. ஆசா ஆட்சியின் முப்பத்தைந்தாம் ஆண்டுவரை மீண்டும் ............... எழவில்லை.

### வலமிருந்து இடம்

2. ஏனெனில் எனக்குச் சாதகமாய் அன்று, பாதகமாகவே எப்பொழுதும் ......... உரைக்கின்றான்.
6. எகிப்திலிருந்து இஸ்ரயேலர் வெளியேறிய காலத்தில் இவர்கள் ................ வழியே போக நீர் அவர்களை அனுமதிக்கவில்லை.
8. அவருக்கும் அவர் மைந்தர்களுக்கும் எந்நாளும் ஒரு குல ............த் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தார். (3ம் 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
9. நீங்கள் நீதி வழங்குவது மனிதனை முன்னிட்டு அன்று ........... முன்னிட்டே (இறுதி எழுத்து 2வதாக உள்ளது)
11. என் கடவுள் எனக்குச் சொல்வதையே நான் ................................
12. பொன்விளக்குத் தண்டின் ................ மாலைதோறும் ஏற்றப்படும் (இறுதி எழுத்து 3வதாய் நிற்கிறது)
14. அபியா தேர்ந்தெடுக்கப்பெற்ற நாற்பதாயிரம் .............. மிக்க வீரர்களுடன் போருக்குச் சென்றான் (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
18. அவர்கள் கூடாரங்களை இழுத்துத் ..................... ஏராளமான ஆடுகளையும், ஒட்டகங்களையும் கைப்பற்றி எருசலேமுக்குத் திரும்பினர்.
22. உமது பெயரால் ................... எதிர்க்க வந்துள்ள எங்களுக்குத் துணையாக வாரும்.

### கீழிருந்து மேல்

9. இஸ்ரயேலர் யாவரும் ................ ஆடுகளைப்போல் மலைகளில் சிதறுண்டு கிடக்கக்கண்டேன்.
11. இவன் எனக்குச் சாதகமாக அன்று பாதகமாகவே இறைவாக்கு ................ என்று நான் முன்பே உமக்குச் சொல்லவில்லையா?
16. யூதாவின் வீரர்கள் போர் ..................... மிட்டனர்.
17. ஏனெனில் அவர்கள் தங்கள் முழு இதயத்தோடு ...........யிட்டனர்.
19. லேவியரோ அப்பணியில் துணை ..................
20. புனிதப்படுத்தப்பட்ட இவர்கள் மட்டுமே .........................
21. யூதாவின் வீரர்களோ மிகுதியான பொருள்களைச் .........யடித்துச் சென்றனர்.
22. பின்னர் ஆண்டவரின் ...........ப் புதுப்பிக்க போவாசு விரும்பினார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 195

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:**



**முதலாம் பரிசு:**
செல்வி, வயலட் யோண்,
இல: 843, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.



**இரண்டாம் பரிசு:**
செ. ஜெபராக்கினி,
சாளம்பன்,
ஆண்டாங்குளம்.

**மூன்றாம் பரிசு:**
A. விபுஷிகன் சோசை,
சுகந்தபுரி,
வங்காலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 195ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. K. றெஜினோல்ட், கற்குளம், சிதம்பரபுரம், வவுனியா.
02. வி. தாசன் டலிமா, தலைமன்னார் கிராமம்.
03. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
04. K. மடோனா, கற்குளம், சிதம்பரபுரம், வவுனியா.
05. ஞா. வினோதர்சினி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
06. ஞா. வினோசர்மி, முதலைகுத்தி.
07. கி.ஆன் ஜொஸ்லின், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
08. கணேசமூர்த்தி, கற்குளம், சிதம்பரபுரம், வவுனியா.
09. அ. புளோறன்ஸ், கங்காணித்தீவு, நானாட்டான்.
10. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
11. K. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
12. செ. அஞ்சலா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
13. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
14. திருமதி. ரஜனி எட்வின், பெரியநாவற்குளம், மாந்தை.
15. S. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
16. ம. பிளண்ரீனா கன்னியர்மடவீதி, மன்னார்.
17. எ. ஜெனோலின், புத்திரர்கண்டான், முருங்கன்.
18. செ. மெல்றோய் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
19. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
20. R. நவின், தேவன்பிட்டி.
21. D.P. சாறா, மாவிலங்கேணி, முருங்கன்.
22. எ. ஜெய்மென், புத்திரர்கண்டான், முருங்கன்.
23. P. ஜெஸ்மின், தேவன்பிட்டி.
24. பெ. அருண் கிருத்திக் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
25. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
26. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. செ. ஜெபறாஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
28. பெ. விறைன் குரூஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
29. D. அன்ரனி ஜய்டன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
30. பி.ஆனோள்ட், ஜோசவாஸ் நகர், தோட்டவெளி.
31. S. பெனிற்றா, பள்ளமடு, விடத்தல்தீவு.
32. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
33. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
34. அ. செபஸ்தியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
35. D. அன்ரன் ஜதுக்சன் குரூஸ், தலைமன்னார் கிராமம்.
36. A. கிரியோண், சுகந்தபுரி, வங்காலை.
37. T. அபிநயா, நறுவிலிக்குளம், மாதிரிகிராமம்.
38. ஜெ. அனோஜினி, சாளம்பன், ஆண்டாங்குளம்.
39. ராஜ் கெயில்குலாஸ், கெபிவீதி, 8ம் வட்டாரம்,பேசாலை.
40. ஜெ. ஆதனா, சாளம்பன், ஆண்டாங்குளம்.
41. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
42. அ. குமார், முதலைகுத்தி.
43. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
44. அ. ஜஸ்மின், ஆவணம், நானாட்டான்.
45. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
46. ஜெ. பிரசன்னா, பெற்றா, மன்னார்.
47. A. ஜெய்ப்பிரியா, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
48. தா. வியாகுலநாயகி, தாஸ்கோட்டம், வேப்பங்குளம்.
49. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
50 ஸ். ரெலன், சாளம்பன், ஆண்டாங்குளம்.

## திரு. யோசேப்....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

திரு. யோசேப் ஆரோக்கியம் குரூஸ் 14 பிரசித்தி பெற்ற நாடகங்களை இயற்றியும், மேடையேற்றியும் பல வாழ்த்துப்பாக்களையும், கண்ணீர் அஞ்சலிகளையும் பாடியும், திருத்தந்தை, ஆயர்களுடைய மடல்களை ஆங்கில மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தும், நூல் ஆய்வுகள் செய்தும் மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவ கலைத்துறையில் ஏறத்தாழ நான்கு தசாப்த காலங்களாக தனது பங்களிப்பை வழங்கி வந்துள்ளார்.

திரு. செபஸ்ரியாம்பிள்ளை தேவநாயகம் கடந்த 28 வருடங்களுக்கு மேலாக கலைத்துறையில் மறைமாவட்ட ரீதியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். சிறப்பாக கிறிஸ்து பிறப்புப் பற்றிய நாட்டுக்கூத்தை 15 தடவைகளும், வில்லுப்பாட்டு, குறுநாடகங்கள், விவசாயப்பாடல், மீனவர் பாடல், கிராமிய நாட்டார் பாடல் போன்ற பலவற்றை மேடையேற்றியுள்ளார். கடந்த மூன்று தசாப்த காலமாக இறைவன் கொடுத்த திறமைகளை தனக்கே உரிய பாணியில் பல ஆண்டுகள் கலைப்பணி ஆற்றி பலதரப்பட்ட மக்களையும் மகிழ்வித்துள்ளார். ●

## அரச கிறிஸ்து......

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஆண்டு தோறும் நடாத்தப்படுகின்ற அரச, கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்தை கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு, திணைக்களம், மறைமாவட்ட ஆயர் இல்லம், மாவட்ட அரச திணைக்களங்கள் இணைந்து சிறப்பாக கொண்டாடி வருகின்றன.

ஆகவே நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான மன்னாரின் அரச கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்ட ஆயத்தங்களையும், நிகழ்வுகளையும் பற்றி மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் நன்றி உணர்வு கலந்த வார்த்தைகளை மேலே குறிப்பிட்டவாறு மன்னாப் பத்திரிகையில் பகிர்ந்து கொண்டார். ●

## அருட்பணி. இ. செபமாலை.....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்தந்தை அவர்கள் பல்வேறு ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களோடு இணைந்து அவர்களுடைய உரிமைகளுக்காக பல்வேறு சர்வதேச மட்டங்களில் குரல்கொடுத்து பல முன்னெடுப்புக்களை செய்து வரும் நிலையில் அவருடைய சமூகப் பணிக்கான மற்றுமொறு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதே வேளை மன்னார் மாவட்டத்தின் IMSESO நிறுவனத்தின் ஸ்தாபகரும், இயக்குனருமான திரு.கொண்ஸன்ரைன் என்பவருக்கும் முதுமாணி பட்டம் அளிக்கப்பட்டுள்ளது

இவர்கள் பணி சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா பாராட்டி, மகிழ்கின்றது. ●

## மன்னா பத்திரிகையின் சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி, உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். ●

- மன்னா நிர்வாகம் -

## கிறிஸ்மஸ் தந்த............

06ஆம் பக்கத் தொடர்ச்சி.

அவர்கள் இருவரும் செல்லாத வைத்தியசாலைகளோ, நாடாத வைத்தியர்களோ இல்லை. ஆனால் எதுவுமே பலனளிக்கவில்லை. இருவரும் என்ன செய்வதென்று தெரியாமல் ஆலயத்திற்குச் சென்று கடவுளிடம் மனமுருகி மன்றாடினார்கள். கிறிஸ்மஸ் அன்றுகூட மகிழ்வில்லாமல் குழந்தை இல்லை எனும் கவலையுடன் தம் வேண்டுதலை மனதிலே நிலை நிறுத்தி பாலனைக் கையிலேந்தி காணிக்கையாகக் கொடுத்து தம் வேண்டுதலை மனதுருகி வேண்டி வீடு திரும்பினார்கள். கிறிஸ்மஸ் முடிந்து இரு வாரங்களிற்குப் பின் புஸ்பாவதி கர்ப்பமானாள். இருவரும் மிக மகிழ்ச்சியடைந்தார்கள். கடவுளுக்கு நன்றி கூறினார்கள். சில மாதங்கள் கழிந்தபின் அவர்கள் கைகளில் அழகானதொரு ஆண்குழந்தை தவழ்ந்தது. இருவரும் மிக மகிழ்ச்சியடைந்து கடவுளுக்கு மீண்டும் நன்றி கூறினார்கள். தம் பெற்றோரிடம் சென்று மன்னிப்புக் கேட்டார்கள். பெற்றோரும் அவர்களை மன்னித்து ஏற்றுக்கொண்டார்கள். அவ்வருட கிறிஸ்மஸ் அன்று அனைவரும் ஒன்றாக, ஒரே குடும்பமாக ஆலயத்திற்குச் சென்று குழந்தையை காணிக்கையாக ஒப்புக் கொடுத்தார்கள். ஆலயத்தில் நேர்த்திகள் செய்துவிட்டு மகிழ்வுடன் வீடு திரும்பினார்கள். கிறிஸ்மஸ் தந்த பரிசுகளான தம் குழந்தைக்காகவும், பெற்றோருக்காகவும் நன்றி கூறி அதனை நினைத்து துஸ்யந்தும், புஸ்பாவதியும் பேரானந்தம் அடைந்தனர். ●

# நீங்காத நினைவுகள்

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30
11
1923



உதிர்வு
15
11
2008

### திரு. சந்தான் சிமியோன்

**(புத்திரர்கண்டான் முருங்கன்)**

**"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்"**

ஆண்டுகள் பத்து உருண்டோடின. ஆனால் உங்கள் பிரிவை எங்களால் மறக்க முடியாது போனதய்யா. பாசத்துடனும், பண்புடனும், நேசத்துடனும் எம்மைப் பக்குவமாய் வளர்த்துவிட்டு எம் உள்ளத்தில் உங்களை நினைக்க வைத்துவிட்டுச் சென்ற தந்தையே.!

உங்கள் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய வேண்டுகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
அன்பு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16
11
1954



உதிர்வு
27
12
2016

### திரு. லோறன்ஸ் கோன்சால் லேயம்

**(தலைமன்னார் கிராமம், தலைமன்னார்)**

அப்பா...! நீங்கள் இன்றி வாழ்கின்றோம். உங்கள் நிழல் இன்றி உங்பள் உயிர்கள் நாங்கள் பாலைவன வெயிலில் அகப்பட்ட மண்புழுக்கள்போல துடிக்கின்றோம். உங்களையன்றி எமக்கு ஆதரவு வேறு யாரப்பா..!

வையக வாழ்வு அது போதுமென்றோ, விண்ணக வாழ்வுதனை தேர்ந்து கொண்டீர்கள். நீங்கள் விதைத்திட்ட பயிர்கள் இங்கு வாடாமல் இறைவனிடம் வேண்டுங்கள் அப்பா.!

**பிரிவை நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
06
1945



உதிர்வு
11
12
2015

### திரு. பிரான்சிஸ் கிருபைநாயகம்

**(இலந்தைவான், அடம்பன்)**

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (தி.பா.116:15)

எழுபது வருடங்கள் இப்புவிதனில்
இன்முகம் காட்டிப் பழகி வந்தீர்கள்.
பண்புடனே அனைவரையும் சிரிப்பால் மகிழவைத்தீர்கள்.
உங்கள் அழகிய வதனம் கண்டு
மூன்று ஆண்டுகள் உருண்டோடினவோ?
இறைவனின் அழைப்பிற்கு நீங்கள் இணங்கி
எம் ஒவ்வொருவரையும் விட்டுப்பிரிந்து சென்றீர்கள்.
விண்ணில் அமைதியான வாழ்வு வாழ
எம் செபங்களில் உங்களுக்காய் வேண்டுகின்றோம்.

பிரிவை நினைந்துருகும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இதயத்தில்.....

**07ஆம் பக்கத் தொடர்.**

எல்லாவற்றிலும் மன்னிக்கும் பண்பை வளர்த்துக் கொள்கின்றேனா? போன்ற கேள்விகளை திருப்பலியில் பங்குபற்றிய விசுவாசிகளிடம் எழுப்பினார்.அமைதியை உருவாக்குவது, இறைவனைப் பின்பற்றி நடப்பதாகும் என்றும் ஆன்மாவிலும், குடும்பத்திலும், உலகிலும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு அமைதியின் இளவரசராம் ஆண்டவரின் உதவியை இறைஞ்சுவோம் என்றும், மறையுரையில் திருத்தந்தை கூறினார். மேலும், இத்திருவருகைக் காலம் குழந்தைத்தன்மை, தாழ்ச்சி, பிறருக்கு ஊழியம்புரிதல் ஆகிய பண்புகளில் நம்மை வளரச் செய்கின்றது. மேலும், அமைதியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்வதற்குச் சக்தியையும் வழங்குகின்றது என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டரில் பதிவாகி இருந்தன. ●

## நம் பொதுவான.....

**07ஆம் பக்கத் தொடர்ச்சி.**

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் துன்பங்களை அகற்றுவதற்கு பொறுப்புள்ள வகையில் நடவடிக்கை எடுப்பது, தற்போதைய மற்றும் எதிர்காலத்தின் தேவைகளை நிறைவேற்றுவது போன்றவை பாரிஸ் ஒப்பந்தங்கள் செயற்படுத்தப்படுவதற்கு அவசியம் என திருப்பீடம் கருதுகின்றது என்றும் கர்தினால் குறிப்பிட்டார். இதற்கு அரசியல் மட்டத்தில் உறுதியான விருப்பம் தேவைப்படுகின்றது எனவும் கூறிய கர்தினால் பரோலின் அவர்கள், ஏழ்மையை அகற்றுதல், மனித மாண்பைக் காத்தல், இயற்கையைப் பாதுகாத்தல் குறித்தவைகளில், இறைவா உமக்கே புகழ் என்ற திருமடலில் திருத்தந்தை குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளையும் எடுத்துரைத்தார்.●

## கிறிஸ்மஸ் மரம்..........

**07ஆம் பக்கத் தொடரச்சி.**

700 தொன் மணலால் அமைக்கப்பட்டுள்ள இந்த உருவங்களை செக் குடியரசு, ஹாலந்து, ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளைச் சேர்ந்த நான்கு கலைஞர்கள் உருவாக்கினர். இக் கிறிஸ்மஸ் மரத்தை வழங்கியவர்கள் மற்றும் கிறிஸ்மஸ் குடிலை அமைத்தவர்கள் என ஏறத்தாழ 350 பேரை வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சந்தித்து, தனது நல்வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்தவேளையில் இவ்வாறு கூறினார். ●

## புனித செபஸ்தியார்.....

**03ஆம் பக்கத் தொடர்ச்சி.**

பங்குத்தந்தை அருட்பணி A. ஞானப்பிரகாசம் அவர்களின் நன்றியுரையினைத் தொடர்ந்து சங்க செயலாளர் திரு. B. எமில்குலாஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். திருப்பலி நிறைவு பெற்றதும் மூத்தோர் வரிசையாக நிற்க, இளையோர் சமுதாயம் அவர்களிடம் ஆசி பெற்றமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதனைத்தொடர்ந்து முதியோர்களினால் பல கண்கவரும் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. மற்றும் அருட்தந்தையர்களினால் முதியோர்களுக்கான பல ஆழமான கருத்துக்கள் வழங்கப்பட்டன. மகிழ்ச்சி நிறைந்த இவ்விழாவினை முன்னின்று நடாத்திய செயற்குழு உறுப்பினர்கள், அருட்பணிப் பேரவையினர், நலன் விரும்பிகள், சமாசத்தின் சார்பில் வருகை தந்து சிறப்பித்த செயலாளர் திரு. பொஸ்கோ, பொருளாளர் திரு. றெஜினோல்ட் ஆகியோருக்கும் செபத்துடன் கூடிய நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.●

## மறைக்கல்வியுரை.....

**07ஆம் பக்கத் தொடர்ச்சி.**

அன்புச் சகோதர சகோதரிகளே! பத்துக்கட்டளைகள் குறித்த நம் மறைக்கல்வித் தொடரின் இறுதிப் பகுதியில் கிறிஸ்துவின் ஒளியில் பத்துக் கட்டளைகள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும் என்பது குறித்துப் பார்ப்போம். பத்துக்கட்டளைகள், சட்டங்களின் தொகுப்பாக நோக்கப்படாமல் உண்மையான மனித வாழ்விற்கான வழிகாட்டியாக நோக்கப்பட வேண்டும். இறைத்தந்தையின் விருப்பத்திற்கு கீழ்ப்படிவதன் வழியாக பிறக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் அன்பில் தன்நிறைவைக் காணும் உண்மையான மனித வாழ்விற்கான வழிகாட்டியாக இக்கட்டளைகள் உள்ளன. நம் ஆண்டவர் சட்டத்தை ஒழிக்க அல்ல மாறாக அதனை நிறைவேற்றுவதற்கே வந்தார். இயேசு கிறிஸ்துவில் ஒரு புதிய வாழ்வை வாழ்வதற்கு நம்மைத் தூண்டுவதன் வழியாக நம் இதயங்களின் ஊனியல்பிற்கு உரியவைகளை எடுத்துவிட்டு, பாவங்களைக் கைவிடுவதற்கான அவைகளின் தூய விருப்பத்திற்குத் திறந்து இயேசுவின் இதயத்திற்கும், அன்பிற்கும், விருப்பங்களிற்கும் இயைந்த வகையில் வாழ நம்மைத் தூண்டுகின்றார் தூய ஆவியார். நம் தந்தையாம் இறைவனுடன் அன்புடனும், விசுவாசத்துடனும் கூடிய உறவில் நுழைவதற்கு பத்துக் கட்டளைகள் முதலில் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

நம்மை அடிமைப்படுத்தும் அனைத்துத் தீய பழக்கங்களையும் கைவிட்டு நம் உண்மையான இளைப்பாறுதலை இயேசுக் கிறிஸ்து மற்றும் தூய ஆவியார் வழங்கும் விடுதலையில் கண்டுகொள்ளவும் நாம் பத்துக்கட்டளைகள் வழியாக அழைப்புப் பெறுகின்றோம். மேலும், நமக்கு அடுத்திருப்பவரைப் பொறுத்தவரையில் நாம் நேர்மையுடனும், ஒருமைப்பாடுடனும் நம்பிக்கைக்கு உரியவராக மீட்படைந்த வாழ்வை வாழும் வழிகள் குறித்து இக்கட்டளைகள் நமக்குச் சொல்லித் தருகின்றன. இயேசுக் கிறிஸ்துவின் முகத்தை நமக்குக் காட்டும் இக்கட்டளைகள் அருளின் புதிய வாழ்விற்கான கதவுகளை நமக்குத் திறக்கின்றன. கடவுள் நமக்கு வழங்கும் மீட்பளிக்கும் அன்பை நாம் ஏற்றுக் கொள்வதன் வழியாக என்றுமே முடிவுறாத மகிழ்ச்சியின் ஆதாரத்தையும், நம்மைக் குறித்த முழு உண்மைகளையும் நாம் கண்டுகொள்கின்றோம்.

இவ்வாறு தன் புதன் மறைக்கல்வியுரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆரம்பிக்கப்பட்ட திருவருகைக்காலத்தைப் பற்றி எடுத்துரைத்து, மனித குலத்தை குறிப்பாக இன்று சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களையும், உதவி தேவைப்படும் நிலையிலிருப்போரையும், துன்புறுவோரையும், பல்வேறு போர்களால் துன்புறுவோரையும் சந்திக்க வரும் குழந்தை இயேசுவை எதிர்கொள்ளும் விதமாக நம்மைத் தயாரிப்போம் என அழைப்பு விடுத்து அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் வழங்கினார். ●

## புலம்பெயர்வு..........

**07ஆம் பக்கத் தொடர்ச்சி**

இவ்விவகாரத்தில் மனிதனும், அவனின் உண்மையான தேவைகளும், பொது நலனும் மையப்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஆயர்கள் உறுதியாய் இருக்கின்றனர் என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. "உங்களிடம் தங்கும் அந்நியர் உங்கள் நாட்டில் பிறந்தவரைப் போல் இருக்க வேண்டும். உங்கள் மீது நீங்கள் அன்புகூர்வது போல் அவர் மீதும் அன்புகூருங்கள், ஏனெனில் எகிப்தில் நீங்களும் அந்நியர்களாய் இருந்தீர்கள். நானே உங்கள் கடவுளாகிய ஆண்டவர்! (லேவி. 19:34)". இந்த விவிலிய வார்த்தைகளுடன் தனது அறிக்கையை ஆரம்பித்துள்ளார் இயேசு சபை பேராயர் Jean-Claude Hollerich. ●

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
24
04
1940



உதிர்வு
10
12
2004

### திரு. பிரலீஸ் சிலுவைராஜா

**(பனங்கட்டுக்கொட்டு, மன்னார்)**

**"ஆண்டவர் தம் அன்பர்களின் இறப்பு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"**

என்றும் எம் நினைவலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்பு ஐயாவே!..... ஆண்டுகள் பதினான்கு கடந்தாலும் பாசத்தில், பழகுவதில் உரமூட்டி வளர்த்து விட்டு, பண்பாய் வாழ்வதை எங்களுக்கு கற்றுத்தந்து, எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றீரகளே ஐயா..!
ஓயாது உங்கள் நினைவுகள். மாறாது நாங்கள் வைத்த பாசம்

**பிரிவை நினைந்துருகும்,**
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## காலநிலை.....

**02ஆம் பக்கத் தொடர்ச்சி.**

உறுதியான திட்டங்கள் வழியாக, காலநிலை மாற்றங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 197 நாடுகள் அதனை அமுல்படுத்துவதற்கும், உலகளாவிய வெப்பநிலையை 2 டிகிரி செல்சியசிற்கும் அதிகமாகாமல் இருப்பதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கும் இம்மாநாட்டில் வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. Katowice நகரில் நடைபெற்றுவரும் உலக உச்சி மாநாடு டிசம்பர் 14ஆம் திகதி நிறைவடையும். ●

## சலேசியன்.....

**02ஆம் பக்கத் தொடர்ச்சி.**

இவர் தனது ஆரம்ப மற்றும் உயர்நிலைக் கல்வியை வங்காலை புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், தனது இளநிலை தத்துவ இயல் மற்றும் கல்வியியல் பட்டப்படிப்பை தன்சானியா நாட்டில் மோஷி தொன் போஸ்கோ கல்லூரி, கிழக்கு ஆபிரிக்க கத்தோலிக்க பல்கலைக்கழகத்திலும், தனது இறையியல் கல்வியை இத்தாலி சலேசிய பாப்பிறைப் பல்கலைக்கழகத்திலும் நிறைவு செய்துள்ளனர்.●

# நீங்காத நினைவுகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. அந்தோனி அருளப்பு**

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

மலர்வு : 06 - 05 - 1943
உதிர்வு : 24 - 12 - 2017

**"ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்" (தி.பா. 91:9)**

"ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம். ஊன் தந்து, உயிர்தந்து உத்தமராய் எம்மை வாழவைத்து, பாசத்துடன், பண்பினையும் பக்குவமாய் ஊட்டி, எம்மை பார் போற்ற வளர்த்தீர்கள். கண் முன்பே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும், உங்கள் நினைவலைகள் எம் உயிரோடும், உணர்வோடும் கலந்து எம் இதயங்களில் என்றும் உயிர்வாழும் அப்பா! உங்கள் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற இடையறாது இறைவனை இறஞ்சுகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. முத்தையா சுப்பிரமணியம் (லூபினாஸ்)**

(சின்னக்கடை, மன்னார்)

மலர்வு : 22 - 12 - 1938
உதிர்வு : 20 - 12 - 2014

**"நீரே என் புகலிடம், என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்" (தி.பா 9:12)**

அன்பெனும் மழை பொழிந்து, அவனியிலே
எம்மை எல்லாம் அரவணைத்துக் காத்த
அன்புத் தெய்வமே! ஆண்டுகள்தான்
நான்கானாலும் உறங்கிடாத
உங்கள் நினைவுகளை மீட்டுகின்றோம்
ஏக்கத்துடன். புழுதி படிந்த கனவுகளும்,
மீட்டப்படாத வயலின் நரம்புகளும்
எமதாகிப்போன பின்பும்
உங்கள் நினைவுகளை மட்டும் - என்றும்
எம் நெஞ்சில் நீங்காமல் வைத்திருக்கின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி / 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு. அ. அதிரியான் சோசை (அப்பையா)**

**திருமதி. அ. திரேசா றெவ்வல் (றோசா)**

(வங்காலை)

| | | | |
|---|---|---|---|
| மலர்வு | 31-07-1925 | மலர்வு | 01-09-1927 |
| உதிர்வு | 12-12-2015 | உதிர்வு | 10-09-2017 |


நேர்மையின் நிறைவாக, நெறிநிறை வாய்மையுடன் மேன்மையில் சிறந்து வாழ்ந்து, வானமே எல்லையாக கண்ணியம் காத்து, கடமை புரிந்து, மண்ணில் மாண்புடன் வாழ்ந்து, எம்மையும் வாழவைத்த தெய்வங்களே!

நெஞ்சிலே நிறைந்து நின்று, மனமெல்லாம் பொங்கி வழிய, நல்லாசி ஈந்து, விண்ணில் மலர்ந்திட்ட எங்கள் அன்பு அப்பா! அம்மா! நீங்கள் கற்றுத்தந்த பாதை நின்று என்றுமே விலகிடா வாழ, நெஞ்சம் கனத்து நிற்கும் எமக்காய் விண்ணவர் ஆசி வேண்டிடுவீர்.

***என்றும் உங்கள் நினைவில்** : அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**திரு. செ. அருள்ஞானம்**

**திரு. செ. தவஞானம்**

(கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம், மன்னார்)

| | | | |
|---|---|---|---|
| மலர்வு | 28-11-1949 | மலர்வு | 13-11-1952 |
| உதிர்வு | 19-12-1988 | உதிர்வு | 19-12-1988 |

முப்பது வருடங்கள் முழுமையாய் சென்றாலும்,
முன்னைய நினைவுகள் என்றுமே அழியவில்லை.
கப்பிய இருள் மேகம் கலைந்து கூட போகலாம்.
கண்ணிமைக்கும் நொடியில் நடந்தவை யாவும்
எப்போதும் எம்மனதில் இருள்போல் நிறைந்திருக்கும்.
எத்தனை வருடங்களாயினும், இவ்வுலகு மறைந்தாலும்
அப்பாவெனும் ஆண்டவனிடம் நீங்கள் சேர்ந்தாலும்
அல்லலுறும் எமக்கு ஆறுதல் யார் தர இயலும்?

***என்றும் உங்கள் நினைவில்** : மனைவியர், பிள்ளைகள் (கனிமொழி, றஞ்சித், பிறேம், சுமன், ஜெனி, ஜொய், சுமி மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.*

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19
04
1949



உதிர்வு
26
12
2013

**திருமதி. தாவிது அந்தோனியா**

(பிலோமினா - சிறுத்தோப்பு, பேசாலை)

**"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரின் முடிவு மகிழ்ச்சிக்குரியதாய் அமையும்: அவர்கள் இறக்கும் நாளில் ஆசி பெறுவார்கள்". (சீராக்:1:13)**

இவர் திரு. ஜே. தாவிது (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதிகளான எஸ். பி. சுகந்தி, எச்.எம். வசந்தி, எஸ்.இ. ஜெயந்தி, ஏ.கே. ஆனந்தி, எம் சகிலா, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. வ. சந்தியோகு, ச. செபஸ்தியம்மா தம்பதிகளின் (கோவ்வங்குளம், நானாட்டான்) அன்பு மகளும் ஆவார். இவரின் ஆன்மா ஆண்டவரிடம் அமைதியடைய மன்றாடுவோமாக.

**பிரிவை நினைந்துருகும்,** கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17
08
1961



உதிர்வு
20
12
2013

**திருமதி. பிரகாசம் கிறேஸ்**

(உப தபால் அதிபர் - சூரியகட்டைக்காடு.)

ஐயிரண்டு மாதங்கள் - எம்மை
அன்பாய் கருத்தாங்கிப் பெற்று,
நேசமாய் எமை வளர்த்த தாயே! - நீங்கள்
எமை விட்டு மறைந்து இன்றுடன்
ஐந்தாண்டுகள் ஆனதம்மா!
தந்தை, பிள்ளைகளாய் - உங்கள்
மருமக்கள், பேரருடன்
இன்பமாய் வாழ நீங்கள் - அருள்
வேண்ட வேண்டும் தாயே!

**பிரிவை நினைந்துருகும்,** கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04
07
1961



உதிர்வு
27
12
2008

**திருமதி. அனக்கிளிற்றஸ் றோஸ்மேரி லெம்பேட்**

(முத்தரிப்புத்துறை)

வாழ்க்கை என்னும் பாதையில்
வழிகாட்டி, எம்மை நல்வழி நடத்திய - தாயே!
இன்று தடம் மாறி, திடம் இழந்து தவிக்கின்றோம் - நாம்
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் பசுமையான நினைவுகள்
இன்றும் எம்மைச் சுற்றுகின்றன.
நித்தம் உங்கள் துணை தேடி ஏங்குகின்றோம் நாம் அம்மா!
எம் வாழ்வில் இழந்துவிட்ட உங்கள் இடத்தை எவரால் நிரப்ப முடியும்? உங்கள் ஆன்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,** கணவன், பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
11
04
1967



உதிர்வு
21
12
2017

**திருமதி. ம. கத்தறின் யசோதா**

(ஆத்திக்குளி)

ஐம்பது ஆண்டுகள் பூமியில் உங்கள் பயணம்
அம்மாவாய், தலைவியாய், ஆசானாய்
உருண்டோடியதம்மா! - இன்று உங்கள் மறைவின் பயணமும்
ஈராறு மாதங்கள் கடந்த நிலையிலும்
உங்கள் நினைவுகள் கண்களை நனைக்கின்றதம்மா!
ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் இழப்பு தினம், தினம் - எம்மை
உருகச் செய்கின்றது தாயே!
அன்புத் தாயே! இறைவன் மடியில் உங்கள் ஆன்மா அமைதிபெற
வேண்டி நிற்கின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,** கணவன், பிள்ளைகள், உறவினர்கள்.